உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

..r 26 ] பராபவ ஆண்டு கார்த்திகைத் திங்கள் 10—12—66 [ இதழ்

...ARA PUBLIC ...



தருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர்

### அருள்வாக்கு

164275

நானுஞ் சுகவடிவாய்
  நண்ணினேன் நின்னருளால்
வானுஞ் சுகவடிவாய்
  மன்னிற்றே — வானுஞ்
சுகரூப மன்றுமணந்
  தோற்றநிலம் போலுன்
அகரூப மட்டே
  அது. (47)

ஆசிரியர் :-
வித்துவான்,
சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-
வித்துவான்,
சி. அருணைவடிவேல் முதலியார்.

உ

குருபாதம்

# "ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 26 | 10–12–66 | இதழ் 1

## உட்பொருள்

| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | விடையேறும் வித்தகன் | 1 |
| 2 | ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் அருளுரை ... | 7 |
| 3 | சித்தாந்த வினாவிடை ... | 13 |
| 4 | தையல்நாயகி அந்தாதி | 17 |
| 5 | இலக்கிய ஆராய்ச்சி ... | 21 |
| 6 | 'அமுதிற்குத் தமிழென்று பேர்' ... | 24 |
| 7 | திருமுறைகள் காட்டும் தொண்டு நெறி ... | 30 |
| 8 | அப்பர் அருள் முரசு ... | 34 |
| 9 | ஐயனார் ... | 40 |
| 10 | வேலூர் இலவச சித்த வைத்தியசாலை ... | 45 |
| 11 | செய்திகள் ... | 50 |
| 12 | எதிர்காலம் ... | 55 |
| 13 | "ஞானசம்பந்தம்" இருபத்துநான்காம் ஆண்டு, இருபத்தைந்தாம் ஆண்டு மலர்ப் பொருளடக்கம் | 59, 62 |
| 14 | Extract from the Visitor's Book | 6, 23, 29, 33, 48, 50 |

அட்டைப்பட விளக்கம்

மாணிக்கவாசகர்.

28—12—66. இல் திருவாதிரைத் திருநாள்.

## 10. மகரம். உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம்

மகரராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். எல்லா காரியங்களும் ஆரம்பத்தில் சிரமத்தை உண்டுபண்ணி பூர்த்தியில் சுபத்தைத்தரும். ராஜாங்க மைத்ரமும் மேலோர் பெரியோர்களுடைய அன்பும் ஏற்படச் செய்யும். நஷ்டமான பொருள்கள் தானாகவந்துசேரும். குடும்பம் ஓங்கும். ஆரோக்யம் உண்டுபண்ணும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

## 11. கும்பம்-அவிட்டம் $\frac{1}{2}$ - சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$.

கும்பராசி 9 பாதங்களும் சுபமேயாகும், நஷ்டதனங்கள் வந்துசேரும். நூதன வஸ்திராபரணங்களும், கிரக, கிராம, பூமி லாபங்களும் தரும். ஆரோக்யம் உண்டுபண்ணும். குடும்பம் ஓங்கும். புதன், வியாழன் சுபமாகும்.

## 12. மீனம். பூரட்டாதி $\frac{1}{2}$ உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். சுப அசுபங்கள் சமனாகும். வரவுக்கு மிஞ்சின செலவும், குடும்பத் தொல்லைகளும் ஏற்படும். மேலோர் பெரியோர்களின் வருத்தம் உண்டுபண்ணும்; ஸ்திரபுத்தி இல்லாமல் இருக்கும். தெய்வபலம் உள்ளவர்கள் சகலத்தையும் ஜெயித்துக்கொண்டு முன்வருவார்கள். வியாழன், வெள்ளி சுபமாகும்.

குறிப்பு :- ஸ்ரீமான்களுக்கும் கனதனவான்களுக்கும் பெரியோர்களுக்கும் வணக்கமாய்த் தெரிவித்துக்கொள்வதாவது சென்ற கார்த்திகை மாதத்திலேயே உலகப்போக்கைப்பற்றி எழுதி இருக்கிறேன். மேற்படி மார்கழி மாதத்திலும், 9ம் தேதி முதல் சனி, ராகு இவர்களும் (மீனராசியில்) சேர்க்கையும், கும்ப சிம்ம ராசிகளில் குரு, செவ்வாய் இவர்களுக்குச் சம திருஷ்டியும் ஏற்படுவதோடு தை மாதம் 23ம் தேதிக்குமேல் சனி, செவ்வாய், ராகு மூவரும் மீன ராசியில், கிரஹ யுத்த ரூபமாகப் பலனைக் கொடுக்கப் போவதாலும், உலக மேக்ஷத்தின் பொருட்டும் ஸஸ்ய தான்ய விருத்தி ஏற்பட்டு தனதான்ய ஸமித்திகள் குறைவு இல்லாமல் இருப்பதின்பொருட்டும் முன் மாதங்களில் எழுதிக்கொண்டுவந்தபடி தெய்வபலத்தைத் தேடிக் கொள்வதோடு குளுர் மாதமாகவும் இருப்பதால் அந்த மாதத்துக்கு உரிய சகலமான தெய்வீக காரியங்களேயும் சிரத்தா பக்தியோடு தர்மத்துக்கு விரோதம் இல்லாமல் நடத்திக் கொண்டுவர ஈச்வரன் அருளால் நமது பாரதபூமி செழித்து ஓங்கும். தென்தேசம் பூர்ணமாக சுபிக்ஷம் அடையும். சுபம் உண்டாகும்.

உ

சிவமயம்

## "ஞானசம்பந்தம்"

## இருபத்தாறுவது ஆண்டு மலர்

# பொருளடக்கம்


| எண் | | பக்க எண் |
|---|---|---|
| 1 | அஞ்சுளசிங்கம் | 433 |
| 2 | அப்பர் அருள் முரசு | 34, 86, 150, 201, 272 |
| 3 | அமுதிற்குத் தமிழென்றுபேர் | 24, 92, 142, 218, 267, 327 |
| 4 | அரியும் கரியும் | 170 |
| 5 | அருளாசியுரை | 81 |
| 6 | ஆடும்பெருமான் | 67 |
| 7 | ஆறும் நூறும் | 99 |
| 8 | இலக்கிய ஆராய்ச்சி | 21 |
| 9 | இலிங்கோற்பவர் | 185 |
| 10 | எதிர்காலம் | 55, 118, 181, 245, 301, 350, 406, 470, 534, 590, 644, 694 |
| 11 | ஐயனுர் | 40 |
| 12 | கருணை விளையாட்டு | 537 |
| 13 | கரும்பும் தேனும் | 134 |
| 14 | கவிதை இன்பம் | 439 |
| 15 | கனவினுல் விளைந்தது | 387 |
| 16 | கிருத்திகா நட்சத்திர அபிஷேக விபரம் | 280 |
| 17 | குருவருளும் திருவருளும் | 353 |
| 18 | கூட்டுப்பண்ணை | 385 |
| 19 | சமயாசாரியர் | 543 |
| 20 | சனிபகவான் | 231 |
| 21 | சனிப்பெயர்ச்சியும் அர்ச்சனையும் | 212 |
| 22 | சிதம்பரம் நகரப்பெருமக்கள் சமர்ப்பித்த ஏகாதசமாலை | 620 |
| 23 | சித்தாந்த வினவிடை | 13, 137, 205, 261, 318, 364, 424, 484, 579, 666 |
| 24 | சுந்தரர் வெண்பா | 637 |
| 25 | சூரியன் | 567, 675 |
| 26 | செய்திகள் | 50, 114, 174, 240, 300, 344, 402, 468, 530, 586, 641, 681 |

27 சைவாதீன பரம்பரை 478
28 ஞானசம்பந்தம் இருபத்துநான்காம் இருபத்தைந்தாம் ஆண்டுமலர்ப் பொருளடக்கம் 59, 62
29 ஞானப்பூ 371
30 தமிழ்நாடு தெய்விகப்பேரவை 446
31 தயாமூலதன்மவழி 489
32 தருமையில் அருளிய அருளுரைச் சுருக்கம் 512
33 தருமையில் தமிழ்நாடு தெய்விகப் பேரவைச் சிறப்புக் கூட்டம் 508
34 திருக்குறளும் திருநாவுக்கரசரும் 656
35 திருக்கூட்டச் சிறப்பு 473
36 திருத்தக்கதேவரின் உவமைநயம் 379
37 திருத்தொண்டர் வரலாறு 158, 224, 277, 429, 564, 671
38 திருநெறிய தெய்வத்தமிழ்மாநாடு 398
39 திருப்பணியே அறப்பணி 574
40 திருமணக்கோலப் பெருமான் 305
41 திருமுறைகள் காட்டும் தொண்டுநெறி 30
42 திருவள்ளுவரும் திருஞானசம்பந்தரும் 597
43 திருவள்ளுவர் விழா 681
44 திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் 629
45 திருவிழா 96
46 தில்லைப்பெருங்கோயில் திருப்பணி 149
47 தில்லையில் பாராட்டுவிழா 609
48 தென்கிழக்காசியாவில் திருவாசகமணி 166
49 தேவாரத்தில் நீராவி 333
50 தைப்பொங்கல் மலர்ந்தது 65
51 தையல்நாயகி அந்தாதி 17, 101, 154, 297, 372, 435, 521
52 தோட்டத்து மாம்பழம் 198
53 நவசத்திகளின் வழிபாடு 172, 236, 284
54 பனையும் பயனும் 571
55 பாணன் படும் பாடு 376
56 புதிய ஆண்டில் 251
57 பெறலரும் பரிசில் 649
58 மதிப்புரை 169, 244, 463, 528
59 மாயூரம் வள்ளலார்கோயிலில் தமிழ்நாடு தெய்விகப் பேரவைச் சிறப்புக் கூட்டம் 516
60 மீனமந்தன் 228
61 முதல்வியர் மூவர் 593

62 முப்புரம் எரித்த முதல்வன் 121
63 வந்தது புத்தாண்டே 249
64 வரவேற்பிதழ்கள் 451, 623
65 வரவேற்பு பாடல்கள் 502
66 வரவேற்பு மடல் 495
67 வளர்ப்புப் பறவை 323
68 வாரணாசி பிரசம்சனம் 326
69 விடையேறும் வித்தகன் 1
70 வீரத்திற்கோர் விசயன் 556
71 வெள்ளந்தாழ் விரிசடையான் 409
72 வேலூர் இலவச சித்த வைத்தியசாலை 45, 109, 162, 214, 292, 338, 465, 525, 639
73 ஜ்யேஷ்டாதேவி 391
74 ஸ்ரீ வனதுர்க்கா மகிமை 233, 281
75 ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் அருளுரை 7, 74, 127, 191, 254, 311, 358, 416
76 ,, ,, ஆசியுரை 576, 605
77 ,, ,, காசி யாத்திரை 287, 340
78 ,, ,, தலவழிபாடு 105
79 ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்களுக்கும், மடாதிபதிகளுக்கும் அளிக்கப்பெற்ற வரவேற்புரை 498
80 ஸ்ரீ ஞானம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி மகோற்சவப் பத்திரிகை i

குமரகுருபரன் — ஆண்டுச் சந்தா 3 — 00 —

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

விலாசம் : நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.

T. M. குமரகுருபரன் பிள்ளை B. A., B. L., அவர்கள்,

"குமரகுருபரன்" ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம்

உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 26 ] பராபவ - கார்த்திகை - 10—12—66 [ இதழ் 1

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

## விடையேறும் வித்தகன்

சீகாழிப் பிள்ளையாராகிய திருஞானசம்பந்தர், பிரம தீர்த்தக் கரையில் அம்பிகையின் அருட்பால் உண்டு, உள்நிறைந்து பொழிந்தெழுந்த உயர்ஞானத் திருமொழியால் இறைவனைப் பாடத்தொடங்கி, அப்பாடல் அப்பெருமான் பால் செல்லும் முறை பெறுவதற்கு, "தோடுடைய செவியன்" எனத் திருச்செவியைச் சிறப்பித்து அருளிச் செய்தபின்பு, அடுத்து அருளிச் செய்தது, "விடை ஏறி" என்று, அவனது விடை ஏறிய திருக்கோலமேயாகும். ஏனெனில், அப்பெருமான் அம்மையோடு உடனாய் எழுந்தருளி வந்து அவருக்கு அருள்செய்ய உதவியதும், மற்றும்,

அடியவர் பலர்க்கும் அவ்வாறு தோன்றி அருள்செய்ய, உதவுவதும் அவ்விடையேயன்றோ ?

சிவபெருமான் ஏறுகின்ற விடையை உலகில் உள்ள காளைமாடுகள் போன்ற ஒன்றேன்று கருதிச் சிலர், 'சிவபெருமான், யானை, குதிரை, தேர், சிவிகை முதலிய உயர்ந்த வாகனங்களில் ஏருமல், எருதின்மேல் ஏறுகின்றது ஏன் என்று இகழ்ந்துரைப்பார்கள். அவர் கொள்கை பற்றியே சிவனடியார்களும் சில சமையங்களில் சிவபெருமானை இங்ஙனம் பழிப்பதுபோலப் பாடுவார்கள். ஆயினும், இறைவன் ஏறுகின்ற விடைக்கு, ஐராவதம், ஐராவணம் போன்ற யானைகளும், உச்சயிச்சிரவம் போன்ற குதிரைகளும் பிறவும் ஈடாகா. அந்த உண்மையை, "பாயும் மால்விடை" என்றுற்போல ஆசிரியன்மார் அருளிச்செய்வர். அதனை, "விரை விடை" என்கின்றுர், 'சிவப்பிரகாசர்' என்னும் பெரியார்.

சிவபெருமான் இடபத்தையே விரும்பி ஏறுவதில் சிறந்ததோர் கருத்து உண்டு. அஃதாவது அவனது விடை, தூய வெண்ணிறமுடையது. காளை (எருது) எனினும். ஈாகு (பசு) எனினும் அதன் இனம், ஆனினமே (பசுவினமே) யாம். ஆனினமே அறத்தின் (புண்ணியத்தின்) வடிவம் என்பது நம் ஆன்றோர் கொள்கை. வெண்ணிறம் அறத்தை யுணர்த்தும் என்பதும் அவர்கள் கொண்ட கொள்கையாதலின், ஆனினத்துள்ளும் வெண்ணிறம் உடையதைச் சிறந்ததாகக் கொண்டு போற்றுவர். ஆகவே, தூய வெண்ணிறம் உடைய விடை, அறத்தின் வடிவமே என்பது சொல்ல வேண்டுவதில்லை.

பசு அறத்தின் வடிவம்; காளை அதனோடு ஆண்மையும் உடையது. அதனுல் விடையை, 'அடல் விடை' எனக் குறிப்பர். ஆகவே அறத்தின் வழியே உலகத்தை ஆட்சி புரியும் அருளாளனுகிய இறைவனுக்கு ஏனை எல்லா ஊர்திகளையும்விடச் சிறந்த ஊர்தி வெள்விடையேயாதல் எத்துணைப் பொருத்தமாகின்றது !

அறம் சடப்பொருள். ஆயினும், அதற்குரிய தெய்வம் ஒன்று உண்டு; அஃது, 'அறக்கடவுள் - தருமதேவதை' என்று சொல்லப்படும்.

> "அன்பி லதனை வெயில்போலக் காயுமே
> அன்பி லதனை அறம்"

என்னும் திருக்குறளில், 'அறம்' என்றதற்கு 'அறக் கடவுள்' எனப் பரிமேலழகர் உரை கூறுதலைக் காண்கின்றோம். இன்னும்,

> 'தெய்வத்தான் ஆகா தெனினும், முயற்சிதன்
> மெய்வருத்தக் கூலி தரும்"

என்றாற்போன்ற இடங்களில், 'தெய்வம்' என்பது, தரும தேவதையையேயாகும்.

இவ் அறக்கடவுள் உயிர்கள் செய்கின்ற நல்வினை தீவினைகளை (புண்ணிய பாவங்களை)க் கண்டு அவற்றிற் கேற்ற பயனைத் தருகின்றது. எனவே, 'அறம்' என்கின்ற ஒழுங்குமுறையை அறக்கடவுள் காத்துவருகின்றது என்பது தெளிவாகும். ஆகவே, எல்லா உயிர்களும் அறக் கடவுள் ஆணைக்கு உட்பட்டே நடக்கின்றன என்பது பெறப்படுகின்றது. 'இந்த அறக்கடவுளே விடை அல்லது இடபம்' என்றும், அந்த இடபமே சிவபெருமானுக்குச் சிறந்த ஊர்தி என்றும் கூறுவோமேயானால், அதனது உண்மைப் பொருள் என்ன? 'அறம் எல்லாவற்றையும் நடத்துகின்றது; அந்த அறத்தைச் சிவபெருமான் நடத்து கின்றான்' என்பதே அதன் உண்மைப் பொருளாகின்றது. அதனால், எல்லாவற்றையும் நடத்தும் முதல்வன் சிவபெருமானே என்பதும் தானே அமைகின்றது. எல்லாரையும் தன் ஆணைவழி நடாத்தும் அறத்தைத் தான் நடாத்தும் பெருமையுடையோன் என்பதைக் குறிக்கவே, திருநாவுக்கரசர் சிவபெருமானை, "விடையேறும் வித்தகன்" எனக் குறிப்பிடு கின்றார்.

*" கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானைக் கரவார்பால்*
*விரவாடும் பெருமானை விடையேறும் வித்தகனை*
*அரவாடச் சடைதாழ அங்கையில் அனலேந்தி*
*இரவாடும் பெருமானை என்மனத்தே வைத்தேனே."*

சிவபெருமான் தோன்றும் பொழுதெல்லாம் இடபத்தின் மேலே தோன்றியருளுதலால், அப்பெருமானை, "விடையின் மேல் வருவான்" என்றே கூறுகின்றார் சுந்தரமூர்த்தி நாயனார். அதுபற்றிச் சேக்கிழாரும், ஞானசம்பந்தரைப் பற்றிக் கூறும்பொழுது, "விடையின்மேல் வருவார்தம்மை - அழுது அழைத்துக்கொண்டவர்" என்று குறிப்பிடுகின்றார்.

சில மதங்கள், 'அறம் ஓர் இயற்கைப்பொருள்; அது தானே செயற்படும்' என்கின்றன. அங்ஙனம் கூறுதல், 'சட்டம் ஒருவரால் செய்யப்படாது தானே தோன்றிய இயற்கைப் பொருள்; அது தானே தன்னை நிறைவேற்றிக்கொள்ளும்' என்று கூறுவதுபோல ஆகும். அறத்தை மிகவும் சிறப்பித்துப் பேசுகின்ற திருவள்ளுவர், அறத்தை இயற்கைப் பொருள் என்று கூறவில்லை; அஃது ஒருவனால் வகுக்கப்பட்ட ஒழுங்கு முறை என்றே கூறுகின்றார். அதனை "வகுத்தான் வகுத்த வகை" என்ற தொடரால் அறியலாம். அறம் இங்ஙனம் ஒருவனால் வகுக்கப்பட்ட ஒழுங்குமுறை என்று முடிவாகிய பின்னர், அந்த ஒருவன் யார் என்று நோக்கின், 'சிவபெருமான்தான்' என்ற முடிவை, அப்பெருமான் விடை ஏறும் நிலை நமக்கு நன்கு தெரிவிக்கின்றது. சிவபெருமானுக்கு ஊர்தியும் விடை; கொடியும் விடை.

*" ஊர்தி வால்வெள் ளேறே; சிறந்த*
*சீர்கெழு கொடியும் அவ்வேறென்ப "*

என்பது புறநானூற்றுக்கடவுள் வாழ்த்து. எல்லாமே அறத்தினால் நடத்தப்பட, சிவபெருமான் அறத்தினைத்தான் நடத்துகின்றான் என்றால், அஃது ஓர் அரிய பெரிய செய்தியேயாகும். இறைவன் அறத்தினை ஊர்தியாகக்கொண்டு நடத்துகின்றான் என்றால், அறத்தின் வழிநிற்பது அவனுக்குச் செய்யும் முதல் திருப்பணியாகும் என்பது இனிது தெளிவாகும். இதுபற்றியே திருவள்ளுவரும்,

*" பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க*
*நெறிநின்றார் நீடுவாழ் வார்."*

என்று அருளினர். அறக்கடவுளே சிவபெருமானுக்கு ஊர்தி யாயினமையைக் கந்தபுராணம் பின்வருமாறு கூறுகின்றது.

'அறக்கடவுளாகிய தரும தேவதை ஒரு பிரளய காலத்தில், அரிபிரமேந்திராதி தேவர்களும், மற்றை யாவரும், எல்லாப் பொருளும் காலவயப்பட்டு அழிதலையும், எல்லாம் அழிந்த பின்னர்ச் சிவபெருமான் ஒருவனே அந்த ஈமத்தில் நின்று உமையம்மை காண நடனம் ஆடுதலையும் தெரிந்து, தான் அழியாதிருக்க, விரும்பி, 'சிவபெருமானை அடைவதே இதற்கு வழி' என்று உணர்ந்து, இடபமாக உருக் கொண்டு அப்பெருமானை அடைந்து, 'அடியேனை அழியாமற் காத்து, என்னை வாகனமாக ஏற்றருளல் வேண்டும்' என்று வேண்டிக்கொண்டது. சிவபெருமானும் அதனை வாகனமாக ஏற்றுக்கொண்டு, 'நீ கிரேதம் முதலிய நான்கு யுகங்களிலும் முறையே, நான்கு, மூன்று, இரண்டு, ஒன்று என்ற பாதங்களால் நடக்கக் கடவை' என்றும், 'நாம் உனக்கு உயிராய் இருந்து உன்னை நடத்துவதால், நம்மை வணங்குவோர் செய்யும் பாவமும் அறமாகும்; நம்மை வணங்காது இகழ்வோர் செய்யும் அறமும் பாவமாய்விடும்' என்றும் அருளிச்செய்தார். அது முதலாக அறவிடை சிவ பெருமானுக்கு ஊர்தியாய் விளங்குகின்றது'.

சிவாலயங்களில் முன்னே உள்ள இடபம் இந்த அற விடையே. அதனை, 'இடப தேவர்' என்றல் மரபு. சிலர் இடப தேவரையே நந்தி தேவர் என நினைத்துக்கொள்கின்றார்கள். இடபத்திற்கு, 'நந்தி' என்ற பெயர் உண்டு. இருப்பினும், நான்கு கைகளையுடையவராய், கையில் பிரம்பு கொண்டு சிவபிரான் திருமுன்பில் காவல் புரியும் அதிகார முடைய நந்தி பெருமான் வேறு. அவர் கோபுர வாயிலில் இருப்பவர். சில திருக்கோயில்களில் மட்டுமே அவருக்குத் திருவுருவம் அமைக்கப்பட்டு விளங்குகின்றது. அவர் சிவபெருமானிடத்தில் உபதேசம் பெற்று, ஏனையோர்க்கு அதனை உபதேசிக்கும் ஞானாசிரியம் ஆவர். ஆகவே,

'நந்தி தேவர் வேறு ; இடப தேவர் வேறு' என்பதை உணர்தல் வேண்டும்.

இந்த இடப தேவர் மூன்று கால்களை முடக்கி, ஒரு காலை நிமிர்த்தியிருத்தல் காணலாம். அதுவே, சிவபெருமான் கட்டளைப்படி கலியுகத்தில் தரும தேவதை ஒரு காலினாலேதான் நடக்கின்றது என்பதைத் தெரிவிப்பது.

> " கடகரியும் பரிமாவும் தேரும்உகந் தேறுதே
> இடபம்உகந் தேறியவா றெனக்கறிய இயம்பேடி
> தடமதில்க ளவைமூன்றுந் தழல்எரித்த அந்நாளில்
> இடபமதாய்த் தாங்கினான் திருமால்காண் சாழலோ "

என்ற திருவாசகத்தின்படி, 'திருமால் சிவபெருமானை இடபமாய்த் தாங்கியதும், அறக்கடவுள் பெற்ற பேற்றைக் கண்டே' என்றும், 'அஃது இடைக்கண் ஒருகாலத்து நிகழ்ந்தது, என்றுமே கந்தபுராணம் கூறுகின்றது. எனவே, அறத்திற்கு உயிராய் விளங்கும் அருளாளனாகிய விடையேறும் வித்தகனை நாம் மன மொழி மெய்களால் நினைத்தும், வாழ்த்தியும், வணங்கியும் வழிபட்டு அறவாணராய் அனைத்து நலனும் அடைவோமாக.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Kambahareswaraswami Devasthanam, Thirubuvanam.

I went round the temple today and worshipped at all the shrines. I should thank the temple authorities for the facilities provided for the worship. The temple and its precincts are maintained very neatly and in a nice condition.

(Sd.) C. Ramachandran,
Sub Collector, Kumbakonam.

4—11—66

உ

குருபாதம்

திருத்தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ சுயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்கியருளிய**

# அருளுரை

---

## திருவருட் செயல்

ஆராயும் வேளையிற் பிரமாதி யாஞலும்
ஐயஒரு செயலுமில்லை ;
அமைதியொடு பேசாத பெருமைபெறு குணசந்த்ர
ராமென இருந்தபேரும்
நேராக ஒருவேளை ஒருகோபம் வரஅந்த
நிறைவொன்று மில்லாமலே
நெட்டுயிர்த் துத்தட் டழிந்துளறு வார்:வசன
நிர்வாகர் என்றபேரும்
பூராய மாய்ஒன்று பேசுமிடம் ஒன்றைப்
புலம்புவார் ; சிவராத்திரிப்
போதுதுயி லோம்என்ற விரதியரும் அறிதுயிற்
போலே இருந்துதுயில்வார் ;
பாராதி தனில்உள்ள செயலெலாம் முடிவிலே
பார்க்கில்நின் செயலல்லவோ ?
பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ஞனந்தமே.

—*தாயுமானவர்.*

'உலகம்' என்பது ஒரு தனிப்பொருளன்று; அது, பல பொருள்களின் கூட்டத்தாலாயது. எனவே, அதில் நடை பெறும் செயல்களும் பல பொருள்களின் செயலாவதல்லது ஒரே பொருளின் செயலாகாது என்பது தெளிவு.

இவ்வாறு இருப்பினும், மக்கள், எல்லாம் தம்மால் ஆவதாக நினைக்கின்றார்கள்; சொல்லுகின்றார்கள். அதுவும், நல்லது நிகழ்ந்தால், அது தங்களால் நிகழ்ந்ததாகவும், தீயது நிகழ்ந்தால், அது மற்றவர்களால் நிகழ்ந்ததாகவும் சொல்லுகின்றார்கள். இவர்களுடைய நினைப்புக்கும், சொல்லுக்கும் சில வேளைகளில் சோதனை ஏற்படுகின்றது; அப்பொழுது தங்கள் கருத்தையும், சொல்லையும் மக்கள் மாற்றிக்கொண்டு, 'நம்மால் ஆவது ஒன்றும் இல்லை' என்று நினைக்கின்றார்கள்; அதை வெளிப்படையாக எடுத்துச் சொல்லவும் செய்கின்றார்கள். ஆனால், உடனே சிறிது நேரத்திற்கெல்லாம் அந்த நிலையை மறந்து, பழையபடியே, எல்லாம் தங்களது செயல் என்று எண்ணத் தொடங்கிவிடுகிறார்கள்.

கடுமையாக உழைக்கும் உழவன் ஒருவன், தனது நிலத்தில் அதிகமான விளைவைக் கண்டுமுதலாகக் காண்கிறான்; அப்பொழுது, அவ்வளவு விளைவும் தன்னால் உண்டானதாக நினைத்து மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறான்; ஆனால், பயிர் சில வேளைகளில் பூச்சிகளால் அழிக்கப்பட்டு விளைவு குறையுமாயின், அந்தக் கெடுதலுக்குப் பூச்சிதான் காரணம் என்று எண்ணி வெறுக்கிறான்; அதை அழிக்கப்பார்க்கிறான். கெடுதலுக்குப் பூச்சி காரணம் என்பது உண்மையே. அது போல, மிகுந்த விளைவுக்கும் பூச்சியில்லாமையும், நல்ல உரமும், அளவான மழையும், அளவான வெயிலும், நிலவளமும், நீர் வளமும் காரணமன்றோ? அவைகளை அவன் எண்ணிப்பார்ப்பதில்லை. 'அத்தனைக் காரணங்களில், தனது உழைப்பும் ஒரு காரணம்' என்று எண்ணாமல், தனது உழைப்பினாலேயே எல்லாம் நடந்ததுபோல நினைக்கின்றான். இதுதான் உண்மைக்கு மாறான ஒன்று. 'உழவன்' என்றால், உழவன்மட்டுமல்ல; எந்தத் தொழிலில் உள்ளவர்களுந்தாம் இப்படிக் கருதுகிறார்கள்

'வானின் றுலகம் வழங்கி வருதலால்' என்றபடி, உலகத்திற்கு மிக இன்றியமையாதது மழை. அதுவும், அடியோடு இல்லாமலே போயினும், அல்லது அளவுகடந்து பொழியினும் உலகத்திற்குக் கெடுதியே விளையும். ஆனால், மழை இல்லாத காலத்தில் அதனைப் பெய்விக்கவோ, அளவு கடந்து பெய்யுங் காலத்து அதனை நிறுத்தவோ யாரால் முடிகின்றது? ஒருவராலும் முடியவில்லை. அதை அனுபவமாகக் கண்டிருந்தும், 'எல்லாம் மனிதனால் ஆகின்றது' என்று சொல்லி, நம்மையே

நாம் ஏன் ஏமாற்றிக்கொள்ள வேண்டும் என்றுதான் பெரியோர்கள் கூறுகின்றார்கள்.

'' மாரி வறப்பின் தருவாரும் இல்லை ; அதனைச்
சிறப்பின் தணிப்பாரும் இல் ''

என்று நாலடியாரும் ஒரு பாடலில் கூறுகின்றது.

மனிதர் மட்டும் இவ்வாறு எல்லாம் தங்களால் ஆவதாக நினைக்கவில்லை. தேவர்களும் இவ்வாறு நினைத்து, அது காரணமாகப் போர் புரிந்தார்கள் என்றும், அப்பொழுது ஆண்டவன் அவர்கள் முன்தோன்றி, அவர்களது அறியாமையைப்போக்கினான் என்றும், புராணங்களும் உபநிடதங்களும் பலவாறாகக் கூறுகின்றன. அதனால், உலகத்தையே உண்டாக்குகின்ற பிரமதேவனாலும், அவனும் தன் விருப்பப்படியே எல்லாவற்றையும் செய்ய இயலாது ; அவனது ஆற்றலுக்கு உட்படாது நிகழ்கின்ற செயல்களும் உள்ளன ; அவற்றை அவன் ஒன்றும் மாற்றியமைக்க இயலாது என்று உணர்கின்றனர் உயர்ந்தோர். இந்த அரிய ஓர் உண்மையைத் தாயுமானவர் 'பரிபூரணானந்தம்' என்னும் தலைப்பில் நன்கு விளக்கிக்காட்டும் பாடலே முதலில் கொடுக்கப்பட்டது.

மேற்சொல்லியபடி எல்லாவற்றையும் பொறுமையாக மனத்தில் கொண்டு எண்ணிப்பார்த்தால் அல்லது, பிரமன் முதலானவர்களுக்குங்கூடச் சுதந்திரமாக ஒரு செயல் இல்லை என்னும் உண்மை புலனாகாது என்பதற்கு, 'ஆராயும் வேளையில் பிரமாதி யானாலும் ஐயஒரு செயலும் இல்லை' என்று கூறினார். யாருக்கும் எந்தச் சுதந்திரமும் இல்லை என்பதை அவர் இப்பாடலில் விளக்கும் முறை மிக அழகாக உள்ளது ;

சிலர், 'சாந்தி! சாந்தி!' என்று சொல்லி, 'அமைதியே சிறந்தது' எனக் கொண்டு, ஒருவரோடும் ஒன்றும் பேசாமல் மௌன நிலையில் இருக்கிறார்கள். ஆனால் அவர்களே ஒரு சமையம் மிகுந்த கோபத்துக்கு ஆளாகித் தங்கள் நிலையை மறந்து, படபடத்து, முகம் சிவந்து, உடல் வெயர்த்து, பெருமூச்செறிந்து தங்களை இகழ்ந்தவர்கள் ஒன்று சொல்லியிருந்தால், தாங்கள் பத்துச்சொல்லி அவர்களை இகழ்ந்து சத்தமிடுகிறார்கள். அப்பொழுது அவர்களது மௌனம் என்னாயிற்று? என்கிறார் தாயுமானவர்.

இனி, 'சபையில் நன்ருகத் திறம்பட நுணுக்கமான பொருள்களை யாவரும் மெச்சும்படி பேசுகின்றவர்கள்' எனப் பெயர்பெற்ற சிறந்த நாவன்மையுடையவர்களும், சில சமையங்களில், ஒன்று சொல்லவேண்டிய இடத்தில் மற்ெருன்றைச் சொல்லி, வெறும் பிதற்றலாகப் பேசுவதைக் காணலாம். அப்பொழுது அவர்களது நாவன்மை எங்கே போயிற்று? என்பது அவர் காட்டும் மற்ருேர் உதாரணம்.

சிலர், 'சிவராத்திரி தினத்தில் இரவில் சிறிதும் உறங்கலாகாது' என்ற உறுதியோடு கண்விழித்துக் கொண்டிருப்பார்கள். ஆனல், அவர்களையும் அறியாமல், கண்கள் சிறிது மூடிக் கொள்ள, திடுக்கென்று விழித்துக்கொண்டு பின்பு தங்கள் காரியத்தைக் கவனிப்பார்கள். அப்பொழுது அவர்களது கண் விழிப்பு என்னவாயிற்று என்ற மற்ருேர் எடுத்துக்காட்டும் அவர் தருவது. இவற்ருலெல்லாம், நினைத்ததை நினைத்தபடியே முடிப்பது என்பது யாருக்குமே இயலாத ஒன்ருக உள்ளது என்பதுதான் அவர் எடுத்து விளக்கும் பொருள்.

இப்படியெல்லாம் சொல்வதிலிருந்து, உலகத்தில் நிகழும் செயல்களில் எந்த ஒன்றிற்கும், யாரும் பொறுப்பில்லை: அது அது அப்படி அப்படியே நிகழ்வதுதான் என்பது கருத்தன்று; மற்று, இறைவனுகிய ஒருவனே அவை எல்லாவற்றிற்கும் முதல்வன் என்பதுதான் கருத்து என்றதையே, 'பாராதி தனில்உள்ள செயல் எலாம் முடிவிலே பார்க்கில் நின்செயலல்லவோ' என இறுதியிற் கூறிமுடித்தார்.

பிரமாதி தேவர்களாலும், அவர்கள் தங்கள் விருப்பப்படியே செயல்களைச் செய்துகொள்ளக்கூடிய நிலை இல்லை என்பது, மேலே காட்டிய அனுபவங்களால் நன்கு விளங்குகின்றது. ஆனல், எல்லாம் இறைவனுகிய ஒருவன் செயலே என்பது எப்படி விளங்குகின்றது என்ற கேள்வி எழலாம். அதற்கு அந்தத் தலைப்பிலேயே மற்ெருரு பாடலில் அவர் தக்க விடை கூறுகின்ருர்.

சிறிது நீரை வயலிலோ, ஏரி குளம் முதலியவற்றிலோ தேக்கிவைக்க வேண்டுமானல் எவ்வளவு கரை கட்டவேண்டியிருக்கின்றது? ஆனல், அளவில்லாத பெருநீராகிய கடல்நீர் கரை என்பதே இல்லாமல் எப்படித் தேங்கிநிற்கின்றது? இப்படி ஆழ்ந்த ஆழி (கடல்) கரையின்றியே நிற்கின்றது; பூமண்டலம், சந்திர மண்டலம், சூரிய மண்டலம், நட்சத்திர மண்டலங்கள்

எவ்வளவு பெரிய பொருள்கள்? அவைகள் எப்படிக் கீழே விழாமல் ஒன்றையொன்று தாக்காமல், அந்தரத்தில் இயங்கி வருகின்றன? இவைகளுக்கெல்லாம், 'இயற்கை' என்று சொல் கின்ற ஒருசொல் போதுமான விடையாகிவிடுமா? என்பதை அவர், 'ஆழாழி கரையின்றி நிற்கவில்லையோ' என்ற பாடலில் விரிவாக எடுத்துக் காட்டுகின்றார். எனவே, பொருள்கள் பல வும் கிடந்த கிடையாய்க் கிடக்காமல் இயங்குதல், அதுவும் ஒழுங்காக, ஒன்றுக்கொன்று இணக்கமாக இயங்குதல் என்பது நன்கு ஆய்ந்து அமைக்கப்பட்ட ஓர் அமைப்பு முறையாகுமல்லது, இயற்கையாகாது என்பதே நம் அனுபவத்திற்கும் பொருந்த மானது. அதைத்தான், 'தெய்வம் இல்லாமலா பொழுது போகின்றது? பொழுது விடிகின்றது? என்று உலகத்தார் சொல்லிக்கொள்கிறார்கள்.

சில செயல்கள் ஒழுங்கிற்கு உட்படாதனபோல நமக்குத் தோன்றலாம். அவை, மழை பெய்வது - பெய்யாதொழிவது, சிலருக்குச் சந்ததிகள் மிகுதியாய் இருப்பது - சிலருக்கு சந்ததியே இல்லாதிருப்பது, சிலர் நெடுங்காலம் உயிர் வாழ் வது - சிலர் மிக இளமையிலே இறப்பது இவை போன்றவை. இவையெல்லாம் உலகத்தின் ஒழுங்குபட்ட அமைப்பு முறைக்கு உட்பட்டு நிகழும் சிறு செயல்களேயன்றி, உலகத்தின் நிலை மையே மாறுவதாகிய பெரு நிகழ்ச்சிகள் அல்ல. ஆகவே, அவற்றிற்கு உரிய நுண்ணிய காரணங்களை நாம் முற்றிலும் நன்கு அறிந்துகொள்ளுதல் இயலாது. மக்கள் அமைக்கும் அமைப்பு முறையில் சிலவேளைகளில் நிகழும் சிலசிறப்பு நிகழ்ச்சி களுக்கே நாம் காரணம் தெரிந்துகொள்ள முடியவில்லை என் றால், இறைவனது செயல்கள் எல்லாவற்றிற்கும் உரிய காரணம் நமக்குத் தெரிந்துதான் ஆகவேண்டும் என்று நாம் எப்படி வாதாட முடியும்? முடியாது. ஆகவே, அவற்றிற்கும் கார ணம் உண்டு என்று போவதே முறை அந்தக் காரணத்தைத் தான் 'வினை அல்லது கன்மம்' என்று சாத்திரங்கள் கூறு கின்றன.

இப்படி 'யாருக்கும் எந்த செயலும் இல்லை; எல்லாம் திருவருட்செயல்' என்று ஏன் கொள்ளவேண்டும்? ஒவ்வொரு வரும் தாம் தாம் செய்வதைத் தம் தம் செயலாகவே கொண் டால் என்ன எனின், 'அஃது உண்மையன்று' என்பதே இது வரையில் காட்டப்பட்டது. மேலும், உலகில் நிகழ்வனவற்றில் சில செயல்களை, 'நான்செய்தேன்' என்றும் பிறர் செய்தார்

என்றும் நினைப்பதாலேயே மனத்தில் செருக்கும், சிலரைப் பற்றிப் பகையுணர்வும், சிலரிடத்தில் நட்புணர்வும் உண்டாகின்றன. இவையே உலகில் நிகழும் இன்னலுக்கெல்லாம் காரணம். ஆகவே, எல்லாம் திருவருட் செயல் என்று உணர்ந்துவிட்டால் துன்பமே இல்லை; அமைதி நிலவும். இந்த அமைதி தான், 'மோனம்' எனப்படுகின்றது. இந்த மோன நிலையின் தொடர்பாக இத்தலைப்பிலே சில கருத்துக்களைச் சில பாடல்களில் தாயுமானவர் கூறுகின்றார்.

'நிலையற்ற இந்த உலகத்தில் நிலையாகப் பெறத்தக்க பொருள் மோனமே. இதைப் பக்குவான்மாக்களுக்கே இறைவன் குருவாகி வந்து உபதேசிப்பான். அந்த உபதேசத்தைப் பெற நான் பட்டபாடு திருவருளுக்கே வெளியாம். எனினும், இந்த உபதேச நிலையில் நிற்பது என்பது வெறும், வாய் வேதாந்தமாகிய வாசா கயிங்கரியத்தினால் ஆவதன்று ; சாதன நிலையில் பலநாள் பழகவேண்டும். அவ்வாறு பழகவும், பழகி அந்த நிலையிலே அசையாமல் நிற்கவும் முடியாமல் கன்மங்கள் வந்து போராடுகின்றன, கன்மத்தின் பயனாக ஆசை விளைகின்றது ; அந்த ஆசைக்கோ ஓர் அளவில்லை ; எவ்வளவு வந்தாலும் நிரம்பாது' இன்னும் இதற்குமேல் வேண்டும் ; இதற்குமேல் வேண்டும்' என்று வளர்ந்துகொண்டே போகின்றது. இந்த ஆசையை அறுத்து, அமைதியை அடையவேண்டும் என்று போகின்றவர்களையும் கன்மம் விடவில்லை. 'எல்லாம் பொய் ; சூனியமே மெய் ; எல்லாம் மாயை - கற்பனை ; நான் என்கின்ற ஆன்மா ஒன்றுதான் உண்மை ; வேறு எதுவும் உண்மை இல்லை ; என்று இப்படித் தத்துவவாதம் செய்து, திருவருளை இழக்கின்றார்கள்; இதற்கெல்லாம் காரணம் அறிவையே சூழ்ந்துள்ள அஞ்ஞானமாகிய அந்தகாரம்; ஆகவே, இறைவனே, அடியேனைத் துன்பக் கடலினின்றும் எடுத்துக் காப்பாற்ற வேண்டும் என்று உனக்குச் சிறிதாயினும் திருவுளம் இருக்குமாயின், ஒருவராலும் அறிதற்கரிய உனது திருவருளில் அடங்கியிருத்தலாகிய மோன நிலையை நான் இடைவிடாது பற்றி நிற்கும்படி அருள்புரியவேண்டும்.'

இவை, 'பரிபூரணானந்தம்' என்னும் தலைப்பில் தாயுமானவர் மிக விரிவாக எடுத்துக்கூறும் கருத்துக்கள். இப்பாடல்களைப் பொருள் உணர்ச்சியுடன் நன்கு ஓதின், 'நான், நான்' என்று முனைத்தெழும் நம் செயல் அற்று, எல்லாம் திருவருட் செயலாக விளங்கி, இன்ப நிலையை எய்தலாம். அங்ஙனம் எய்துமாறு திருவருள் முன்னிற்பதாக.

# சித்தாந்த வினாவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான்.

திரு. சி. அருணைவடிவேலு முதலியார்

( மலர் 25, இதழ் 12, பக்கம் 557 இன் தொடர்ச்சி )

மாணக்கன் : ஆணவமலம் என்பது ஒரு தனிப்பொருள் ; அஃது உயிரின் இயற்கை அன்று ; செயற்கையே எனின், அஃது எப்பொழுது வந்து உயிரைப் பற்றியது ? அல்லது உயிர் எப்பொழுது அதன்கண் சென்று வீழ்ந்தது ?

ஆசிரியர் : உயிர் ஒருகாலத்தில் தூய்மையாய் இருந்து, பின்பு ஆணவமலத்தால் மூடப்பட்டது என்று சைவ சித்தாந்தம் சொல்லவில்லை. ஏனெனில், அவ்வாறு கூறினல், 'தூய்மையாய் இருந்த உயிரை ஆணவமலம் எவ்வாறு வந்து பற்றியது ?' என்ற வின எழும். அதற்குக் காரணம் கூறுதல் இயலாது. ஆகவே, 'காரணம் இல்லாமலே எப்படியோ வந்து பற்றிக் கொண்டது' என்றதுதான் சொல்லவேண்டி வரும். அவ்வாறு சொல்லின், 'ஆணவமலம் நீங்கிய தூய நிலையாகிய முத்தியிலும் ஏன் அஃது அவ்வாறு வந்து பற்றுதல் கூடாது ?' என்ற வின பின்னர் எழும்.

> " ஆசுஆதியேல் அணைவ காரணம்என் ? முத்திநிலை
> பேசாது அகவும் பிணி "

என்னும் திருவருட்பயனைக் காண்க.

இதனல், 'உயிர் ஆணவமலம் இன்றி இருந்த காலமே இல்லை ; தொன்று தொட்டு ஆணவ மலத்தோடு கூடித்தான் உள்ளது' என்பதே சைவசித்தாந்தமாதல் அறிக.

மாணக்கன் : அங்ஙனமாயின், அதனை, 'உயிரின் இயற்கை' என்றுதான் சொல்லவேண்டும். ஏனெனில், ஒரு பொருள் என்று உண்டோ அன்று அதற்கு உடனய் நிற்பது மற்றொரு பொருள் உண்டாயின், அஃது அதன் இயற்கை என்றே சொல்லப்படும் என்பது எல்லார்க்கும் ஒத்த துணிபாகலானும், 'சகஜம்' என்னும் வடமொழிப் பதத்திற்கு, 'உடன் தோன்று

தல்' என்பதே பொருளாதலானும், 'சகஜம், இயற்கை' என்பன ஒரு பொருட் சொற்களாதலானும், 'உயிர் என்று உண்டோ அன்றே அதற்கு ஆணவ மலம் உண்டு' எனின், அஃது அதற்கு இயற்கை என்றுதான் சொல்லவேண்டும். அதனை மறுத்தல் எப்படி ?

ஆசிரியர் : ஒரு பொருட்கு, 'குணம், குற்றம்' என்ற இரண்டு உண்டு. அவற்றுள், 'குணம்' ஒன்றே பொருட்கு, 'இயற்கை' எனப்படும். குற்றம், 'இயற்கை' எனப்படாது. ஏனெனில், ஒரு பொருட்கு ஒருதன்மை இயற்கையாயின், அஃது அதனைவிட்டு நீங்குதல் கூடாது. நீங்குமாயின், பொருளும் அதனோடு கூடவே அழிந்துவிடும். குற்றம் அவ்வாறன்று ; அது, முதலில் பொருளோடு உடன் தோன்றிற்றாயினும், பின்பு அதனை விட்டு நீங்கிவிடும். ஆகவே, குற்றம் என்பது பொருட்கு இயற்கையாகாது, செயற்கையேயாம்.

மாணாக்கன் : முன்னும் இன்றி, பின்னும் இன்றி, இடையிலே வந்து, இடையிலே நீங்குவதுதான் செயற்கையின் தன்மை. பொருளோடு முதலில் தோன்றியது பின்பும் அதனை விட்டு நீங்குதல் இல்லை ; ஆயினும், அடிகள் சொல்வதுபோல, ஒரு பொருளில் ஒரு குற்றம் அஃது உள்ள பொழுதே உடன் தோன்றி, பின்பு நீங்கும் என்பதற்குச் சான்று ஏதேனும் உண்டோ ?

ஆசிரியர் : நிரம்ப உண்டு. செம்பிற்கு அதன்கண் உள்ள களிம்பு, குற்றமேயாம். அக்குற்றம் அதற்கு இடையிலே வந்த தன்று. செம்பு என்று உண்டோ, அன்றே அதற்குக் களிம்பும் உண்டு. அந்தக் களிம்பு செம்போடு என்றும் இராது நீங்கி விடும் என்பது, அதனைப் புளி முதலியவை இட்டுத் துலக்குங் காலத்து நீங்குதலால் அறியப்படும். துலக்கப்பட்ட செம்பில், பின்பும் களிம்பு மேலிடுதல், அது அதனை விட்டு நீங்காமையாலாம். ஆயினும், இரசவாதம் செய்வோர், செம்பைப் புடம் இட்டுப் பதமறிந்து இரச குளிகையைச் சேர்க்கும்பொழுது, அக்களிம்பு முழுதும் நீங்க, செம்பு பொன்னேடு ஒத்தமாற்றுடையதாய் விளங்கும். ஆகவே, களிம்பாகிய குற்றம், செம்பிற்குச் செயற்கையேயன்றி இயற்கையன்று என்பது தேற்றம்.

இன்னும், அரிசி தோன்றும்பொழுது உமியோடு கூடத் தோன்றுகின்றதேயன்றித் தனியாய்த் தோன்றுவதில்லை. ஆயினும், அரிசிக்கு உமி குற்றமேயன்றிக் குணம் அன்று. அதனல், உமி பின்பு அரிசியைவிட்டு நீங்க, அரிசி தூய்மைபெற்று விளங்கு

தலைக் காண்கின்றோம். ஆகவே, உமியாகிய குற்றம் அரிசிக்குச் செயற்கையேயன்றி இயற்கையன்று என்பது தெளிவாகும். பொருளோடு இவ்வாறு ஒன்றுபட்டிருக்கும் குற்றத்தை, 'உபாதி' என்பர்.

"நெல்லிற் குமியும் நிகழ்செம்பினிற் களிம்பும்
சொல்லிற் புதிதன்று தொன்மையே"

என்பது சிவஞானபோதம்.

இவ்வாற்றால், உயிர் என்று உண்டோ அன்றே அதற்கு ஆணவமலம் இருப்பினும், அஃது அதற்குக் குற்றமாய்ப் பின்பு விட்டு நீங்குதலின், 'செயற்கை' எனப்படுமன்றி, இயற்கை எனப்படாது. ஆயினும், அதனை, 'சகசக் குற்றம்' என்றும் 'அனாதி செயற்கை' எனவும் வழங்குவர் என உணர்க.

மாணாக்கன்: ஆணவமலம் உயிரின் இயற்கையன்று; அனாதி செயற்கையாய் அதனை அனாதியே பற்றி இருக்கின்றது என்பதை அடிகள் காட்டிய எடுத்துக்காட்டுக்களால் அடியேன் உணர்கின்றேன்; ஆயினும், ஆணவ மலம் என்பது ஒன்றோ? பலவோ? ஒன்றாயின், எண்ணில்லாத ஆன்மாக்களின் அறிவையும் மறைத்தல் இயலாதாதலின், பலவாகத்தானே இருத்தல் வேண்டும்?

ஆசிரியர்; அவ்வாறில்லை; ஆணவ மலம் பல இல்லை; ஒன்றே. ஆயினும், எண்ணில்லாத சத்திகளை யுடையது. அதனால், எண்ணில்லாத ஆன்மாக்களை மறைத்து நிற்றல் கூடுவதாகின்றது.

மாணாக்கன்: ஆணவ மலத்தை, 'ஒன்று' என்னாது, 'பல' என்று கொண்டு, 'ஒவ்வோர் ஆன்மாவையும், ஒவ்வோர் ஆணவ மலம் மறைக்கின்றது' என்று கூறினால் என்னை?

ஆசிரியர்: சடப்பொருள்களில் ஒரு நிகரனவாகிய பொருள் பல இருக்குமாயின், அவை ஒன்றன் காரியமாய் இருக்குமல்லது, காரணமாய் இராது. காரியப் பொருளுக்குத் தோற்றமும் அழிவும் உண்டு. ஆதலின், ஆணவம் சடப்பொருளாகலின், அது பலவாய் இருப்பின், ஒன்றிலிருந்து தோன்றியதாதல் வேண்டும். அவ்வாறு ஆணவத்தின் தோற்றத்திற்குக் காரணமாகச் சொல்லுதற்கு வேறொரு பொருள் இல்லை. மேலும், ஆணவ மலத்தை ஒன்றிலிருந்து தோன்றியதாகக் கொள்ளுதற்குக் காரணமே இல்லை. தோற்றம் இல்லையாகவே, அழிவும் இல்லை. அதனால், ஆணவ மலம் ஒன்றேயன்றிப் பல இல்லை.

மாணாக்கன்; ஒரு பொருளே எண்ணில்லாத சத்திகளை யுடையதாய் எண்ணில்லாத ஆன்மாக்களை மறைத்தல் எவ்வாறு?

ஆசிரியர்: பகலவன் ஒரு பொருளேயாயினும், எண்ணில்லாத கதிர்களைக்கொண்டு எண்ணில்லாத பொருள்களை விளக்குகிறான்; அது விளக்கும் சத்தி. அதுபோலவே இருளும் ஒன்றாய் இருந்தே எண்ணில்லாத சத்திகளைக் கொண்டு, எண்ணில்லாத கண்களை மறைக்கின்றது என்றும், இது மறைக்கும் சத்தி என்றும் உணர்தல் வேண்டும். இங்ஙனமே, ஆணவமலமும், எண்ணிறந்த மறைத்தற் சத்திகளை யுடையதாய், எண்ணிறந்த ஆன்மாக்களை மறைப்பதாகும்.

மாணாக்கன்: ஆணவமலம் தோற்றம் இல்லது என்று கொள்வோம்; ஆனால், 'அழிவும் இல்லாதது' என்று ஏன் கொள்ளவேண்டும்? ஆணவமலம் அழிவில்லாதது எனின், அஃது ஆன்மாக்களைவிட்டு எக்காலத்திலும் நீங்காததாய்விடும் அன்றோ?

ஆசிரியர்: அழிவுடைய பொருள் தோற்றம் உடையதாகவே இருக்கும்; தோற்றம் இல்லாத பொருள் அழிவும் இல்லதேயாம். ஆகவே, ஆணவமலத்திற்குத் தோற்றம் இல்லை எனின், அழிவும் இல்லதேயாம். ஆதலின், ஆணவம் தோற்றமும் அழிவும் இல்லாது, என்றும் உள்ள பொருளேயாம்.

மாணாக்கன்: அங்ஙனமாயின், அஃது ஆன்மாவை விட்டு நீங்குதல் எப்படி?

ஆசிரியர்: ஆணவமலம் நீங்குதல் என்பது, அஃது அழிவதன்று; அதன் சத்தி கெடுவதேயாம்.

மாணாக்கன்: 'சத்தி' என்பது பொருளின் தன்மையேயாகலின், தன்மை கெட்டும், பொருள் கெடாது நிற்பது எப்படி?

ஆசிரியர்: இங்கு, 'சத்தி கெடுதல்' என்பது, சத்தி அழிந்தொழிவதன்று; தான், தனக்கு மறுதலையான மற்றொரு பொருளால் தடைப்பட்டுச் செயலிழந்து நிற்பதேயாம். ஆதலின், ஆணவமலத்தின் சத்தி அங்ஙனம் செயலற்று நிற்கும் பொழுது, ஆணவம் இருந்தும் இல்லைதானே? அதைத்தான், 'ஆணவம் நீங்கிற்று' என்று கூறுகின்றனர். ஆகவே, ஆணவத்திற்கு அழிவில்லையாயினும், நீங்குதல் என்பது பொருந்துவதேயாகின்றது. இதனால், ஆணவமலம், ஒன்றாய், சடமாய், எண்ணில்லாத சத்திகளை யுடையதாய், தனது மறுதலைப் பொருளால் அச் சத்திகள் மடங்கப் பெறுவதாய் உள்ளது எனத் தெளிவாயாக.

(தொடரும்)

# தையல்நாயகி அந்தாதி

[ மூலமும் உரையும் ]

( மலர் 25, இதழ் 12, பக்கம் 573 இன் தொடர்ச்சி )

வயித்திய ஞத னிடத்தே யிருந்திந்த வையகத்தார்
பயித்தியந் தீரத் தயில மளிப்பைநின் பாலனென்றன்
சயித்திய நோயைத் தணியா திருப்பதென் றண்ணருளே
கயிற்றிறம் வேண்டு மதோதயி லம்மை கருத்தென்னையோ? 51

(இ-ள்) வயித்திய நாதன் இடத்தே இருந்து - பரமேசுவரனுடைய இடது பாகத்தின்கண் எழுந்தருளியிருந்து, இந்த வையகத்தார் பயித்தியம் தீர - இந்த மண்ணுலக மக்களுடைய பயித்தியமானது ஒழிவுறுமாறு, தயிலம் அளிப்பை - தைலமாகிய அவுடதத்தினைக் கொடுத்தருளிக் காப்பாய். (அங்ஙனமிருப்ப) நின்பாலன் என்றன் சயித்தியம் நோயை தணியாது இருப்பது ஏவன் - தேவரீருடைய பாலகனுகிய எளியேனுடைய சயித்தியமெனும் பெரு நோயைத் தணியும்படிச் செய்தருளாதிருப்பது யாது காரணம் பற்றியோ? தண் அருள் ஏ தயிலம்மை - குளிர்ந்த அருள் உருவாயுள்ள தயிலம்மையென்னும் பாலாம்பிகையே! கய்யில் திறம் வேண்டும் அது ஓ கருத்து என்னை ஓ - தேவரீருடைய திருக்கரத்தில் வன்மைத்தன்மை வேண்டப் பெறுவதா? அன்றித் தேவரீருடைய திருவுள்ளக் கருத்துத்தான் யாதோ? அறிகில்லேன். (எ-று)

(கு-ரை) சயித்தியம் - தீராநோய் (குளிர்நோயுமாம்). கை - கய் எனப் போலியாயிற்று. திறம் - வன்மை. வேண்டுமது - பகுதிப் பொருள் விகுதி. விரும்பும் என்பது பொருள். என் எவன் என்பது என்னை யென வாயிற்று. ஒகாரம் வினுப் பொருட்டு.

கருமஞ் சிதைக்கு நெறிகண்டி லேன்மிகு கைதவமே
தருமஞ் சகத்தி லெனவெண்ணிச் செய்குவன் ருடனிலே
யருமஞ் சலர்கோன் டருச்சிக்கி லேனின் னருளுறுமோ
கருமஞ் சனைய குழலாய்! தயிலம்மை காத்தருளே. 52

(இ-ள்) கரு மஞ்சு அனைய குழலாய் தயிலம்மை ஏ - நீருண்ட கரிய மேகம் போன்ற கூந்தலை யுடையவளே! தையல் நாயகித் தாயே! கருமம் சிதைக்கும் நெறிகண்டிலேன் - இப்

புவியின்கண் தீவினைகளைத் தேய்க்கும் ஞானமார்க்கத்தினையும் அறிந்திலேன். சகத்தில் - தோன்றிநின்றழியுந் தன்மைத்தாய இவ்வுலகில், மிகு கைதவம் ஏ தருமம் என எண்ணிச்செய்குவன் - வஞ்சகச் செயலினையே புண்ணியச் செயல் எனக் கருதிச் செய்கின்றேன். நின் தாள் த(ன்)னில் ஏ – தேவரீருடைய திருவடித் தாமரை மலரில், அரும் அஞ்சு அலர் கொண்டு அருச்சிக்கிலேன் - அரிய நறுமணமுடைய பூக்களைக் கொண்டு பிரார்த்தனைபுரிந்து அருச்சனை வழிபாடு செய்கிலேன். (இங்ஙனமிருப்ப தேவரீருடைய) அருள் உறும் ஓ - கருணை கிட்டிடுமே? காத்து அருள் - காப்பாற்றி யருளுவீராக. (எ - று)

(கு - ரை) அஞ்சு அலர் - ஐவகையான மலர்கள். அருச்சனை – போற்றல். தாள் தனில் – தாடனில். நெறி - மார்க்கம். காண்டல் – அறிதல். கைதவம் – வஞ்சனை. மஞ்சு - மேகம். காத்தருள் - பிறவிப் பெருங்கடலில் வீழாமல் முத்தியங்கரையிற் சேர்த்தருள். குழல் – கூந்தல். சிதைத்தல் - கெடுத்தல். எண்ணல் – உறுதியெனக் கருதல். கருமம் - செயல்; வினைகள்.

காலா யுதக்கொடி யோனுகு வாகனன் காழிவந்தோன்
பாலாங் குனச்செய் தளித்திட்ட நீபல நாடுதிசெய்
பாலா வஞ்சேலென் றொருமொழி கூறிப் பரித்தருளாய்
நாலா மறைமுடி மேலா யொளிர்தைய லாயகியே. 53

(இ - ள்) நால் ஆம் மறைமுடி மேல் ஆய் ஒளிர் தையல் நாயகி ஏ - நான்கு வேதங்களின் சிரசாகிய (வேதசிரசு) உபநிடதங்களின் மேல் பொருந்தி விளங்குகின்ற பாலாம்பிகைத் தாயே! கால் ஆயுதம் கொடியோன் - கோழிக் கொடி யுடையவனாகிய முருகப் பெருமானுக்கும், ஆகு வாகனன் – பெருச்சாளியை யூர்தியாகவுடைய விநாயகப் பெருமானுக்கும், காழிவந்தோன் - சீகாழிப் பதியில் அவதரித்தருளிய திருஞானசம்பந்தப்பிள்ளையாருக்கும், பால் ஆங்கு உண்ணச் செய்து அளித்திட்ட நீ - அவர்கள் பருவமறிந்து திருமுலைப்பாலைக் கறந்துண்பித்தருளிய தேவரீர். பலநாள் துதி செய் பாலா - (தமியேனைப் பார்த்து) பல காலமாகத் தோத்திரம் பண்ணுகின்ற பாலனே (பிள்ளையே). அஞ்சேல் என்று – எதற்கும் பயப்படாதே என்று, ஒருமொழி கூறி பரித்தருளாய் - ஒரு நற்சொல்லை நவின்று தாங்கியருளவில்லையே ஏன்? (எ - று)

(கு - ரை) கால் ஆயுதம் - காலைப் படையாக வுடையது கோழி. பரித்தல் – தாங்குதல் (சுமத்தல்). தையல் - பாலப் பருவப் பெண்.

நாயிற் கடையனை தீக்குண மூடனை நாணிலியைப்
பேயின் றொழிலனைப் பொக்கஞ்சொல் வாயனைப் பேதையனை
நோயினிற் பட்ட மடியனை கைவிட நோக்கியிந்தச்
சேயின் றுயரொழிப் பாய்தைய னாயகி செப்பினனே. 54

(இ - ள்) நாயின் கடையனை - இழிந்த நாயினைக் காட்டிலும் தாழ்ந்தவனை, தீ குணம் மூடனை - கொடிய தன்மையினை யுடைய அறிவிலியை, நாண் இல்லியை - நாண வேண்டியதற்கு நாணுதல் செய்யாதவனை, பேயின் தொழிலனை - பேய் போன்ற அங்குமிங்குந் திரிதல் செயல் உடையவனை, பொக்கம் சொல் வாயனை - பிறருடைய செயலினைக் கண்டு பொக்கமே மிகச் சொல்கின்ற வாயினை யுடையவனை, பேதையனை - பேதமைக் குணம் பெரிதும் உடையவனை, நோயினில் பட்ட மடியனை - பிறவிப் பெரும் பிணியினில் சிக்குண்ட சோம்பேறியை, கைவிடல் - சிறிதும் கைவிட்டு விடாதே, நோக்கி - இந்நிலையி லுள்ள அடியவனைப் பார்த்து, தையல் நாயகி - பாலாம்பிகை யென்னுந் திருநாமம் பூண்டருளிய தேவியே, செப்பினன் - இந் நிலைமையினைக் கண்டு விண்ணப்பித்துள்ளேன், இந்த சேயின் துயர் ஒழிப்பாய் - இம்மகவின் பிறவித்துயரினைக்களைந்தின்புறச் செய்தருள்வாய். (எ - று)

(கு - ரை) பொக்கம் - பொய்ம்மை, மடியன் - சோம்பல் உடையவன், மூடன் - அறிவின்மை யுடையவன், பேதையன் - தரித்திரத்தன்மை யுடையவன். சேய் - மகவு. செப்புதல் - நய முறக் கூறல்.

செந்தமி ழாலபி ராமி புராதனி செய்யபரை
யந்தரி சுந்தரி யாரணி காரணி யம்பிகைமா
மந்திர ரூபி தயிலம்மை யென்று வழுத்திடுவேன்
அந்தரந் தந்திடு வாயுட் குறிப்பை யறிந்தனையே. 55

(இ - ள்) தேவீ, அபிராமி - மிக்க அழகினை யுடையவளே என்றும். புராதனி - மிகப் பழமையானவளே! செய்யபரை - செவந்த (நல்ல) பராசத்தியே. அந்தரி - பார்வதியே! சுந்தரி - பேரழகாக விளங்கும் பெருமாட்டியே! ஆரணி - வேத வடிவான வளே! நாரணி - உலக காரணமானவளே! அம்பிகை - தாயே, மாமந்திரரூபி - மகாமந்திரமாகிய ஓங்கார வடிவானவளே! தயிலம்மை - மகாப்பிறவிப் பிணிக்குத்தைலமாகியமருந்தளிக்குந் தாயே! என்றும். செந்தமிழால் - செந்தமிழ் செய்யுட்களால். வழுத்திடுவேன் - துதிபுரிவேன். உள் குறிப்பை அறிந்தனை -

அடியவன் உள்ளக்கிடக்கையினை நன்கு அறிந்துள்ளாய். ஆகையினால். அந்தரம் தந்திடுவாய் - முத்தியின்பினை யருளுவீராக. (எ - று.)

(கு - ரை) மந்திரம் - நினைப்பவனைக் காப்பது. புராதனம்- பழமை. ஆரணம் - வேதங்கள். பரை - மேலானவள். வழுத்தல் - தோத்திரம் (துதி) புரிதல். ரூபி - வடமொழிச்சொல். உரூபி. அந்தரி - முடிவு நிலையைக் கொடுப்பவள். தந்திடுவாய் - இடு பகுதிப் பொருள் விகுதி. (தருவாய்) என்பது பொருள். ஏகாரம் - அசைநிலை.

அனைமார் தனையர்செய் குற்றமளப்பில வாயிடினுந்
தினைமாத் திரமெனுஞ் சிந்தைசெய் யாரெனத் தேர்ந்தவனீ !
யெனைமாக் கொடியனென் றெள்ள லழகல்ல வென்றவளே !
நினைமானங் காத்தரு ளாய்தைய லாயகி நேசம்வைத்தே. 56

(இ - ள்) தனயர் செய் குற்றம் அளப்பு இல ஆயிடினும் - பிள்ளைகளாயினோர் அறிந்தோ அறியாமலோ செய்த குற்றங்கள் எண்ணிக்கையற்றன ஆனாலும், அ(ன்)னைமார் தினை மாத்திரம் எ(ன்)னும் சிந்தை செய்யார் என - பெற்ற தாய்மார்கள் தினையளவாயினும் கருதி எண்ணம் செய்ய மாட்டார்கள் என்று. தேர்ந்தவள் நீ - தெளிந்தவர் தேவரீர், என்றவள் ஏ. தையல் நாயகி - அகில சராசரங்களைப் பெற்ற தாயே, பாலாம்பிகையே. எ(ன்)னை மா கொடியன் என்று எள்ளல் - அடியவனாகிய பாலகனை, பெரிய கொடிய பாவிப்பையல் என்று திருவுளங்கொண்டருளி இகழ்ந்து ஒதுக்கிவிடாதே. அழகு அல்ல - இஃது அழகாகுமா? (அழகு ஆகாது). நினை - எண்ணியருள்வாய், நேசம் வைத்து ஏ, மானம் காத்து அருளாய் - தயவு செய்து அன்பு வைத்தே மானத்தினைக் காத்து அருளுவீராக. (எ - று)

(கு - ரை) அனை அன்னை யென்பதன் இடைக்குறை. மானம் - வெட்கம். மா - பெரிய. எள்ளல் - இகழல். தேர்தல் - தெளிதல். அளப்பு - எண்ணிக்கைமாத்திரம், அளவு. நேசம் - நே என்பதன் அடிப்படையாக வந்தது.

(தொடரும்)

# இலக்கிய ஆராய்ச்சி

**திரு. மு. வை. அரவிந்தன்** எம். ஏ. எல்.,

இலக்கியம் ஓர் இன்ப உலகம். சிறந்த இலக்கியங்களைக் கற்கும்போது இன்பம் உண்டாகிறது. கற்றதை எண்ணி உணரும்போது முன்பு பெற்ற இன்பம்பெருகுகின்றது. அறிவு முதிர முன்பு கற்ற நூல்கள் புதிய புதிய உண்மைகளை விளக்கி மேன்மேலும் இன்பமூட்டுகின்றன. இலக்கியம் தந்த இன்பத்தைப் பிறரும் அடைந்து இன்புறக் காணும்போது நம் நெஞ்சம் இன்பக் கடலில் திளைக்கின்றது. "உம்மால் இலக்கிய இன்பம் பெறுகின்றபேறு பெற்றோம்!" என்று உலகம் பாராட்டும் போது உண்டாகும் இன்பத்திற்கு அளவுண்டா ?

இவ்வாறு படித்தாலும், படிக்கக் கேட்டாலும், நினைத்தாலும், உணர்ந்தாலும் உணர்ந்ததைப் பிறர்க்கு உணர்த்தினாலும், உணர்ந்தவர் மகிழக்கண்டாலும் பேரின்பம் தருகின்ற இலக்கியம் ஓர் இன்ப உலகம் தானே ?

தாம் பெற்ற இன்பத்தை இவ்வுலகம் பெறவேண்டும் என்று எண்ணிய அறிஞர்களே திறனாய்வுக் கலையைத் தோற்றுவித்தனர்; வளர்த்தனர். இலக்கியத்தைச் சுவைத்து இன்புறுவது எப்படி ? என்பதை உலகிற்கு உணர்த்த வேண்டும் என்பதே திறனாய்வுக் கலைஞர்களின் நோக்கம்.

> " தாமின் புறுவ(து) உலகின்புறக் கண்டு
> காமுறுவர் கற்றறிந் தார்." (குறள்)

திறனாய்வாளர்கள் நல்ல நூல்களைத் தேடித் தேடிக் கற்கின்றனர்; இலக்கியப் பொழிலில் கலை வண்டாய் அலைந்து திரிகின்றனர்; இலக்கியத்தேன் திரட்டுகின்றனர்; திரட்டிய தேனை உலகிற்கு அளிக்கின்றனர்; தாம் திரட்டித்தந்த தேனைப் பிறர் சுவைத்து மகிழும்போது பேரின்பம் கொள்ளுகின்றனர்.

சிறந்த திறனாய்வாளன் நுண்ணிய அறிவுடையவன்; பல நூல்களிலும் சென்ற பரந்த அறிவும் அவனுக்கு உண்டு; ஆழமும் அகலமும், ஒருங்கே அவன் அறிவில் அமைந்திருக்கின்றன.

விருப்பு வெறுப்பின்றிக் குணமும் குற்றமும் நாடும் பண்புடையவனே சிறந்த திறனாய்வாளன். தான் விரும்பிய ஒன்றை மிகுதியாகப் போற்றுவதும், தான் விரும்பாததை மிக வெறுப்பதும் திறனாய்வாளனிடம் காண முடியாத பண்புகள் ஆகும்.

" ... ... ...இகலொடு
செற்றம் நீக்கிய மனத்தினர் ; யாவதும்
கற்றோர் அறியா அறிவினர் ; கற்றோர்க்குத்
தாம்வரம் பாகிய தலைமையர். (திருமுருகு. 131-4)

என்று திறனாய்வாளரைப் போற்றலாம்.

ஒன்றை மிகுதியாக விரும்பிப் போற்றும்போது, அதனிடம் உள்ள குறைகள் தெரிவதில்லை. ஒன்றை மிகுதியாக வெறுக்கும் போது, அதன் சிறப்புத் தெரிவதில்லை.

" காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண்
ஆய்தல் அறிவுடையார் கண்ணதே - காய்தலின்கண்
உற்ற குணம் தோன்றாது ஒழியும், உவத்தலின்கண்
குற்றமும் தோன்றாக் கெடும் ", — அறநெறிச்சாரம்.

எனவே நூல்களை ஆராய்வோர் விருப்பு வெறுப்புக்கள் அற்றவராய் இருத்தல் வேண்டும் ; குணமும் ஒருங்கே நாடும் பண்புடையவராக இருத்தல் வேண்டும் ;

" குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல். (குறள்)

என்ற அறிவுரையைப் போற்றி ஒழுகவேண்டும். திறனாராய்ச்சியாளனால், பால் நிறைந்த குடத்தில், ஒரு துளி நஞ்சை இட்டுக் கெடுத்து விடவும் முடியும். அத்தகைய ஆராய்ச்சியாளனால் இலக்கிய உலகில் தீமைகள் மலியும் ; மக்களிடையே பிணக்கும் பூசலும் பெருகும்.

நடுநிலைமை உடையவரே சிறந்த திறனாய்வாளராக விளங்க முடியும். திறனாய்வாளர்கள் துலாக்கோல் போன்று நடுநிலைமையில் நின்று பொருளை உலகிற்கு விளக்கிக் காட்ட வேண்டும். துலாக்கோலிடம் நான்கு சிறந்த பண்புகளை நாம் காண்கின்றோம். முதலில், தான் சமமாக நிற்றல், பின்னர்த் தன்னிடம் வைத்த பொருளின் எடையை வரையறுத்து உணர்த்துதல், தனக்கு இருக்கவேண்டிய நல்லியல்புகளைக் குறைவறப் பெற்றிருத்தல், தான் விரும்பும் பக்கம் சாய்ந்துவிடாதிருத்தல் ஆகிய

நான்கு சிறந்த பண்புகளை அதனிடம் காண்கிறோம். ஒரு நல்ல துலாக்கோல் போலத் திறனாய்வாளனும் உலகத்தார்க்குப் பயன்படவேண்டும். திறனாய்வாளன் குற்றங்குறையற்றவனாய் இருக்கவேண்டும். தான் எடுத்து ஆராயும் இலக்கியத்தின் உண்மைத் தன்மையைத் தான் உணர்ந்தவாறே வெளியிடும் துணிவு அவனுக்கு வேண்டும். ஆழ்ந்த புலமையும், பரந்த அறிவும் ஒருங்கே அவன் பெற்றிருக்கவேண்டும். திறனாய்வாளன் விருப்பு வெறுப்பு அற்றவனாய் - தான் விரும்பும் இலக்கியத்தின் நல்ல பகுதியைப் பெரிதும் பாராட்டிக் குற்றத்தை மறைக்காதவனாய்-தான் வெறுக்கும் நூலின் நயமற்ற சில பகுதிகளை மட்டும் எடுத்துக் கூறிவிட்டுக் குணத்தை மறைக்காதவனாய்-தான் விரும்பும் பக்கம் சாயாதவனாய் இருக்க வேண்டும்.

" சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி " (குறள்)

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Sivalogathiagarajaswami Devasthanam, Achalpuram.

I visited the temple on 26th October '66 and found that the temple is neatly well maintained. The staff attended to their duties punctually with devotion.

(Sd.) V. A. Vasulingam,
26—10—66 District Kadhi & Village Industries Officer Thanjavur.

Visited the temple to-day without notice. The Superintendent and others were present. I had dharshan of the Almighty in a calm and serene atmosphere. The upkeep of the temple is superior and excellent. The surroundings initiate the soul nearer to God. May God bless the Adhinam in its endearous to propagate the saivaite culture throughout the world.

(Sd.) M. Krishnan,
22—11—66. Assistant Settlement Officer, Thanjavur.

# 'அமுதிற்குத் தமிழென்று பேர்'

வித்துவான். திருமதி. ப. நீலா

(மலர் 25, இதழ் 12, பக்கம் 563 இன் தொடர்ச்சி)

தொட்ட இடமெல்லாம் தித்திக்கும் எட்டுத்தொகை நூலுள் அடுத்த இடத்தை 'ஐங்குறுநூறு' - என்ற அகப்பொருள் நூல் பெறுகிறது. திணைக்கு நூறாக ஐந்துதிணை தழுவிய இந்நூலைப் பெரும்புலவர் கூடலூர்க்கிழார்-தொகுத்தார். குறுகிய அடிகளால் ஆகிய பாடல்கள் (சிறிய எல்லை 3 அடி - பேரெல்லை 6 அடி) மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை ஆகிய திணைகளில் அமைந்து மிகப்பெரிய உண்மைகளை விளக்குகின்றன. ஒரு திணையில் பத்துத் துறைகள் உண்டு - ஒருதுறைக்குப் பத்துப் பாடல்கள். உதாரணமாகக் குறிஞ்சித்திணை 1. அன்னாய்வாழிப் பத்து 2. அன்னாய்ப்பத்து 3. அம்மவாழிப்பத்து 4. தெய்யோப்பத்து. 5. வெறிப்பத்து, 6. குன்றக் குறவன் பத்து, 7. கேழற் பத்து, 8. குரங்குப்பத்து 9. கிளிப்பத்து, 10. மஞ்ஞைப்பத்து - என அமைந்துள்ளது.

ஐங்குறுநூற்றில் அமைந்த திணைமுறையினையும் பாடிய ஆசிரியர்களையும் ஒருபாடல் நினைவுபடுத்துகிறது.

"மருதமோ ரம்போகி நெய்தலம் மூவன்
கருதுங் குறிஞ்சி கபிலன் - கருதிய
பாலையோ தலாந்தை பனிமுல்லை பேயனே
நூலையோ தைங்குறு நூறு."

ஐங்குறுநூற்றின் ஆசிரியர்கள் அனைவரும் (மருதம் - ஓரம்போகியார், நெய்தல் - அம்மூவனார், குறிஞ்சி - கபிலர், பாலை - ஓதலாந்தையார், முல்லை - பேயனார்) இந்நூல் தவிர எட்டுத்தொகையுள் சிலபல தனிப் பாடல்களையும் பாடியுள்ளனர். இந்நூலின் திணை அமைப்பு முறை 'தொல்காப்பியத்தில்' மாயோன் மேய காடுறை உலகம் - என்ற நூற்பாவில் - சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே - என்ற உம்மையால் அமைத்துக் கொள்ளப்பட்ட முறையாகும். இவ்வாறாக இந்நூலைத் தொகுக்க எண்ணி - ஆதரவு அளித்த அரசன் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறையாகும்.

### மனங்கவரும் ஓர் மருதக் காட்சி :

இத்திணையைப் பாடிய ஓரம்போகியார் பெண்மனதை மிக நுட்பமாகப் புரிந்துகொண்டு பேசும் இடங்கள் பலவற்றுள் ஒன்று காணலாம். மருதத்தின் உரிப்பொருள் ஊடல். வள்ளுவர் இப்பொருள்பற்றி,

"யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்
யாரினும் யாரினும் என்று" - இப்படிப் பாடுவார்.

கண்ணுள்ளார் காதலர் - ஆகவே கண்ணில் மைகூட எழுத மனமில்லை - நெஞ்சத்தார் காதலர் - ஆகவே வெய்துண்டல் அஞ்சுதும் - என்று எண்ணுகின்ற பெண்மையின் மென்மையை வள்ளுவரைப்போலவே தெளிவாகப் படம் பிடிக்கிறார் ஓரம் போகியார்.

தலைவனொருவன் பரத்தையரைச் சார்ந்த ஒழுக்கம் உள்ளவன். அவனிடம் அவனது இல்லக்கிழத்தி கொண்ட ஊடலை நீக்குவதற்காக மெல்லென வருகிறான் பாணன். கண்டாள் தலைவி. அவள் நெஞ்சிலே நிழலாடுகிறது ஒரு காட்சி. 'ஒரு சமயம் தலைவன் மார்பில் அணிந்திருந்த மாலையில் இருந்த வண்டொன்று தன் கூந்தலிலே சூடியுள்ள பூவில் தேனைச் சுவைக்க வந்தமர்ந்தது. இதனைக்கூடப் பொறுத்துக்கொள்ள இயலாத பரத்தை வெகுண்டு பலசொல் சொன்னாள். இப்பொழுது நீ இங்கே ஊடலுணர்த்தவந்த செய்தி அவளுக்குத் தெரிந்தால் என்னவாகும்! ஆகவே விரைந்து போய்விடு' என்கிறாள் தலைவி.

"வெகுண்டனள் என்ப பாண நின் தலைமகள்
மகிழ்நன் மார்பின் அவிழிணர் நறுந்தார்த்
தாதுண் பறவை வந்தெம்
போதார் கூந்தல் இருந்தன எனவே" - (மரு - 82.)

### பிரிவென்ற பெருந்துயரம் :

நெய்தலின் உரிப்பொருள் இரங்கல். பிரிந்துசென்ற தலைவனை நினைந்து வருந்திக்கொண்டிருக்கிறாள் தலைவி. அவளை கடற்கரைக் காட்சிகளும் - கடலொலியும் மிகுதியாக வருத்துகிறது. அவளிடம் வந்த பாணன் - தலைவன் பிரிந்து சென்ற துணையானே இப்படி உடல்மெலிதல் தகுமோ என வினவினான்; அதற்கவள்,

"யானெவன் செய்கோ பாண ஆனுது
மெல்லம் புலம்பன் பிரிந்தெனப்
புல்லென் றனஎன் புரிவளைத் தோளே"
- என்று கூறுகிருள்.

கொடியாரின் கொடுமையை தொடியொடு தொல்கவின் வாடிய தோள்களே உரைக்குமே! தலைவனது பிரிவை நானுணருமுன் அது என் வளையல்களுக்கு எப்படியோ தெரிந்துவிடுகிறது.

தண்ணந் துறைவனின் பிரிவை எனது கண்களும் வளையல்களுமே ஊரார்க்கு உரைத்து விடும். அன்பிற்கு அடைக்குந் தாழுண்டோ - இல்லையே.

அன்பென்ற அருங்கலம்:

உலக மக்களின் நல்வாழ்வென்ற மதயானை அன்பென்ற அங்குசத்தால் செவ்வழி நடக்கிறது. இதோ தலைவனின் அன்பென்ற புணைவேண்டி நிற்கின்ற பேதை மகளிர் பேசும் சொல் கேட்போம்.

தினைப்புனக் கொல்லைக்காவலில் தலைவியும் தோழியும் ஈடுபட்டிருந்த நேரம் - தலைவனின் இதயமென்ற கோட்டையிலும் இடங்கொண்டாள் தலைவி. மண்ணும் பயில் வித்தும் ஒன்ற தோழி நீரென நின்று உதவினுள். இப்பொழுது தலைவனைப் பார்த்து வரைதலை நினைவூட்டுகிருள்.

தலைவனே; தினைகளெல்லாம் கதிர்விடத் துவங்கிவிட்டன. இனி தலைவியை இங்கே காவலுக்கு அனுப்ப தாய் சம்மதியாள்! காரணம் - இவள் கதிர்களை உண்ணவரும் கிளிகளைத் தன் இன்குரலால் ஓட்டும்போது அவைகள் இவள் குரலைத் தம் இனத்தின் குரலென எண்ணி முன்னினும் மிகுதியாகக் கொல்லைக்குள் குடிபுகுகின்றன. அதனுல் இவள் காவலுக்கு வரமாட்டாள். நீரும் இவளை விரைவில் மணமுடித்துக்கொள்ளல் நல்லது - என்று தலைவனிடம் இனித் தலைவியைத் தனியே சந்தித்தல் இயலாதென்பதைத் தோழி அறிவுறுத்துவாள்.

திருத்தக்கதேவர் கேமசரி கிளி ஓட்டும் அழகினை சொல்வார்.

" தினைவினை சாரற் செவ்வாய் சிறுகிளி மாதர் ஒப்பம்
புனைவளைத் தோளி சொல்லைக் கிளியெனக் கிள்ளை போகா
நனைவிளர் கோதை நாணிப் பொன்னரி மாலை ஒச்சக்
கனைகழற் குரிசில் நண்ணிக் கவள்கிளி ஒப்பினுனே."

இந்தப் பொல்லாத கிளிகள் பேசுவதிலும் வல்லவை. சிறையாரும் மடக்கிளியே. தோணிபுரத்தீசன் திருநாமம் எனக்கொருகால் பேசாயே! என்று திருஞானசம்பந்தர் வாக்கு அமைந்துள்ளது. அத்துடன் இக்கிள்ளைகள் வேதம் பயின்று பொருள் சொல்லும் காட்சியைத் திருவீழிமிழலையிலே காணலாம் என்கிறார்.

" பாரிசையும் பண்டிதர்கள் பன்னாளும்
பயின்றோதும் ஓசைகேட்டு
வேரிமலி பொழிற்கிள்ளை வேதங்கள்
பொருள் சொல்லும் மிழலையாமே."

" வளைவாய்க் கிள்ளை மறைவிளி பயிற்றும்
மறைகாப்பாளர் உறை பதி " யைப்

பெரும்பாணாற்றுப் படையிலும் சந்திக்கிறோம்.

## ஓதலாந்தையாரின் ஓவியம் :-

கண்ணின் மணிபோலத் தன்மகளைப் பேணி வளர்த்தாள் தாய். மலையுளே பிறந்த சந்தனம் மலைக்கே பயன்படுதல் இல்லையே. அணிபவர்க்கல்லாமல் முத்து தான் பிறந்த கடலுக்கா பயன்படுகிறது. இல்லையே!

இதையெல்லாம் நன்கு உணர்ந்தும் கூட ஏன்? தன் தாய்க்குத் தானும் இதுபோல் அமைந்து துன்பம் தானே கொடுத்தோம். இதுதானே பெண் குலத்தின் பண்பு – என்ற சிந்தனைகள் இடையிடையே வந்தாலும் – தாயின் மனம் பேதமை என்ற அணிகலம் பூண்டு அவலம் படுதலே இயல்பு.

இதோ அத்தகைய அவதிக்குள்ளான தாயை இங்கே சந்திக்கிறோம். மகள் தலைவனுடன் சென்றுவிட்டாள். அவள் பயின்ற இடங்களில்-பொருள்களிலெல்லாம் அவளையே கண்டு, கண்டு தாயின் மனம் கலங்குகிறது.

" இதுஎன் பாவைக் கினியநன் பாவை
இதுஎன் பைங்கிளி எடுத்த பைங்கிளி
இதுஎன் பூவைக் கினியசொற் பூவையென்
றலம்வரு நோக்கி னலம்வருஞ் சுடர்நுதல்
காண்டொறுங் காண்டொறுங் கலங்கி
நீங்கினளோ என்பூங் கண்ணேளே."

நீ நீப்பின் வாழ்வாளோ ?

" செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை "

எங்களை விட்டு நீவிர் பிரிந்து செல்ல எண்ணினல் நீர் நீத்த தாமரை போல தலைவி பொலிவழிந்து இறந்து பட்டாலும் படுவாள் ! ஆகவே தாங்கள் திரும்பிவரும்போது 'யார் உம்மை வரவேற்கிருர்களோ அவர்களிடம் வரவைச் சொல்லுங்கள் என்கிருள் தோழி. தலைவியை விடுத்துப் பொருள் தேடிவர எண்ணுகிருன் தலைமகன். இதனைக் குறிப்பானறிந்த தலைவி,

பொருள் தேடி வருவதே அவர் நோக்கமாயிருக்குமானல்,

" ...........தம்மின்றி
யாமுயிர் வாழு மதுகையிலே மாயின்
தொய்யில் துறந்தார் அவரெனத் தம்வயின்
ஓய்யார் நுவலும் பழிநிற்பத் தம்மொடு
போயின்று சொல்லென் உயிர்." (பாலைக்கலி)

என்று அவனின்றித் தான் உயிர் வாழ முடியாதென்பதைத் தெளிபடக் கூறுகிருள்.

ஐங்குறு நூற்றிலும் இதையொத்த செய்தி காணப்படுகிறது.

" மாமழை யிடியூஉத் தளிசொரிந் தன்றே
வாணுதல் பசப்பச் செலவயர்ந் தனையே
யாமே நிற்றுறந் தமையலம்
ஆய்மல ருண்கணு நீர்நிறைந் தனவே !"

கார் காலமாகிய இப்பொழுது நீ செலவயர்ந்தால் அதனைத் தலைவியால் தாங்க இயலாது-என்கிருள் தோழி.

இப்படித் தடுத்தும் கேளாமல் தலைவன் பிரிதலும், தலைவி பாணன் முதலானோரிடம் தன் ஆற்றாமையை வெளிப்படுத்தி இரங்குதலும் – இலக்கியத்தில் வந்துள்ள செய்திகள் தாம்.

“ கருவி வானங் கார்சிறந் தார்ப்பப்
பருவஞ் செய்தன பைங்கொடி முல்லை
பல்லான் கோவலர் படலைக் கூட்டும்
அன்பின் மாலையும் உடைத்தோ
அன்பில் பாண அவர் சென்ற நாட்டே ”

என்னைத் துன்புறுத்தும் இவ்வழல் போன்ற மாலைக்காலம் அவரை வருத்தாதோ – காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகிய இந்நோய் மலரும் மாலைக்காலம் அவர் நாட்டில் இல்லையோ – என்றெல்லாம் தலைவி வருந்துதல் உண்டு.

இத்தகைய மனஉணர்வுகளைத் தெளிய உணர்த்தும் இலக்கியமே ‘ஐங்குறு நூறு’. வாழ்வின் பிரதிபலிப்பு இலக்கியங்கள்– என்ற தொடர்தான் எத்துணை உண்மை !

( விரியும் )

## EXTRACT FROM THE VISITORS' BOOK

### Dharmapuram Adhinam

**Sri Vaithianathaswamy Devasthanam, Vaithiswarankoil.**

The late Sir Kanthiah Vaithianathan, came here 60 years ago and had his tonsure and was cleristened Vaithianathan. It gave us very great pleasure for us, his daughter Ananthi and son-in-law Viswa to take Darshan at Vydeeswaran. We are both immensely impressed and moved by the spiritual atmosphere here and also by the very kind and helpful reception we got on our arrival.

(Sd.) Visva Selvaratnam,
Chartered Architect, Colombo
Ceylon.

12—11—66.

# திருமுறைகள் காட்டும் தொண்டு நெறி

வித்துவான், திரு. நடேசநாராயணன்

மன்னடியார் உள்ளில் மகிழ்ந்துறையும் பெம்மானே
நின்னடியே போற்றிடுமென் நெஞ்சு 1

வாய்மை தவமறிவு வண்மை புகழின்பம்
தாய்மை மிளிரன்பே சார்தலினுல் - தூய்மையுறு
சைவமே மண்மீதில் சால்புடைத்தாம் என்றமையால்
உய்வமே ஓம்பியதை ஓர்ந்து. 2

சைவத்து நாயன்மார் அறுபத்து மூவர்
சரிதையுரை பெரியபுரா ணத்தின் நற் பேரே.
தெய்வத்துத் 'திருத்தொண்டர் புராண' மெனச் சொன்னுல்
திகழ்கின்ற தொண்டுநெறிக் கிருக்கின்ற கீர்த்தி
மெய்வைத்த கீர்த்தியெனில் குறைசிறிது முண்டோ?
மேதினியில் தொண்டொன்றே நாயன்மா ராகச்
செய்வித்த(து) அடியாரை என்றறிந்த பின்னும்
செப்பிடவோ திருத்தொண்டின் சீர்த்திதனை இங்கே. 3

அழைப்புக்கும் ஆணைக்கும் பிறகே சென்றே
ஆற்றுகிற செயலெல்லாம் வாழ்வில் நாளும்
பிழைப்புக்குச் செய்கின்ற செயலே யன்றிப்
பிறங்குகிற தொண்டாமோ தாமே முன்வந்(து)
உழைத்தன்பால் விருப்போடு செய்யுந் தொண்டே
உண்மையிலே தொண்டாகும் இதனை யோர்ந்தால்
தழைத்தோங்கும் திருமுறையால் காணுந் தொண்டே
சத்தியமாய்த் தொண்டுகளில் சிறந்த தொண்டாம். 4

பொது நலத்துச் சிந்தையராய்ப்
பொழிகின்ற அன்பினராய்ப்
பொலிந்து நாளும்
மது நிலைத்த மலரடியோன்
மகிழ்ந்துறையும் திருக்கோயில்
மலர வேண்டி

புதுநலத்துச் செயலாற்றின்
புண்ணியநற் றொண்டாகும்
புவியோர் என்றும்
இதுநிலைத்த தொண்டென்றே
இயம்பிடுவர் இதிலையம்
இல்லை இல்லை. 5

பேச்சாலே செய்கின்ற தொண்டுகளும் உண்டு
பேசாமல் எழுந்தாலே தொண்டுசெயல் உண்டு
மூச்சாலே உடலுழைத்துச் செயுந்தொண்டு முண்டு
முத்தொண்டில் செயற்றொண்டே முதன்மையுடைத் தாகும்
பேச்சாலும் எழுத்தாலும் செயலாலும் தொண்டு
பெற்றியுடன் செய்தவரோ நாயன்மார் ஆவார்
வீச்சாலே பரவுபுகழ் மேவியவித் தொண்டர்
வீடெய்தி னார்என்னில் தொண்டாலே யன்றோ? 6

தூண்டிலினால் மீன்பிடிப்பர்; உச்சியுள காயைத்
துரட்டாலே அறுத்திடுவர் அஃதேபோல் காக்கும்
ஆண்டவனைத் தொண்டுநெறி யொன்றாலே யீர்த்தல்
ஆகுமெனும் உண்மையினைத் திருமுறைகள் செப்பும்
மாண்புடையீர்! எல்லோரும் தொண்டுநெறி பற்றி
மாநிலத்தே உயர்ந்திடுவோம் மகிழ்ந்திதற்கே நந்தம்
ஆண்டவனும் அருள்புரிவான் ஐயமிதில் வேண்டா
ஆருயிர்க்குச் செயுந்தொண்டே ஆண்டவர்க்கு மாமே. 7

சுந்தரர்தாம் மணங்கொண்ட நேரத்தில் நேரில்
தோன்றியநம் இறைவனார் குறுக்கிட்டு, "நீதான்
எந்தமக்கே அடிமையிதில் ஐயமொன்றும் இல்லை
எழுந்துடனே வந்திடுவாய் தொண்டுசெய்வாய்" என்றே
பந்தமுடன் உரைத்(து) அவரைத் தடுத்தாட்கொண்(டு)அன்றே
பணிபுரியச் செய்தவர்தாம் எம்பெருமான் என்றால்
சிந்தனைசேர் அன்பர்களே தெரிந்தெண்ணிப் பாரீர்
சிறப்பான தொண்டுநெறிக் கீடொன்றும் உண்டோ? 8

"காலனெடுத்த முதலைவாய்ப் பிள்ளைதனை மீட்டுக்
களிப்புறவே பெற்றோர்க்குக் கொடுத்திட்ட பின்பே
ஆலமுண்ட அவிநாசிப் பெம்மானைப் போற்றி
ஆசிபெறுவேன்" என்ற சுந்தரரின் வாக்கால்

'ஞாலமெலாம் காக்கின்ற நம்பனையே போற்றி
நாளெல்லாம் தொழுவதுடன் நல்லுயிர்க்குத் தொண்டு
சீலமுடன் செய்திடலே சிறப்பாகும்' என்ற
சீர்மையுறு செய்தியினைத் தெளிந்திடுவீர் நன்றே. 9

திடமாடுங் கோயிற் சிவனுக்குப் பக்தி சிறப்பதுடன்
நடமாடும் ஜீவர்க்கு நன்றாகும் தொண்டை நடத்திடலே
தடமாடும் வாழ்வைத் தருவாழ்வா யாக்கும் தனிச்செயலாம்
இடமாடும் வைப்பில் இதுபோற்றி வாழின் இசைமிகுமே. 10

தொண்டால் இறைவன் துணையைப் பெறலாம் சுடருலகில்
விண்டால் அறுபத்து மூவர் இதுபோல் விழுப்பணியால்
கொண்டார் புகழினை! நாயன்மா ரென்றே கொளல்அவரைத்
தொண்டால் விளைந்த பயனும் என்றே துணிந்திடுவீர். 11

நங்க டம்பனை என்ற பாட்டினில்
நாயனாரவர் அன்புடன்
'என்கடன் உனைத் தொழுதுகிடத்த' லென்(று)
இசைத்திலார்; 'பணிசெய்வதே
என்கடன்' எனச் செப்பினர் எனில்
ஏற்றதொண் டதன் பெற்றியை
உங்கள் சிந்தையில் எண்ணித் தேறுவீர்
உண்மையாமிதை அன்பர்காள். 12

தொண்டலால் துணையு மில்லான்
தூயநம் ஈசன் என்று
விண்டவர் அப்பர் என்றால்
வியன்மிகு தொண்டுக் கீடோ
உண்டெனிற் சொல்வீர் நந்தம்
உயர்திரு முறைகள் எல்லாம்
கண்டதோ தொண்டே யாகும்
கருத்தினில் ஏற்பீர் நன்றே' 13

புலன்களினால் தொண்டுசெயின் உள்ளமதும் ஒன்றும்
புரிந்திதனை மேற்கொள்ளின் பயன்பெறுவர் நன்றே
"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே" என்றோதும்
நிகரற்ற அப்பரது தேவாரப் பாட்டால்
அலையாயும் நெஞ்சத்தை அடக்கிடலாம் என்ற
அனுபவத்தை அறிந்திடுவீர் அன்புடையீர் நந்தம்
தலைமுதலாத் தாள்வரையில் தொண்டுணர்வே மேவத்
தக்கபணி செய்திடுவீர் சத்தியத்தில் நின்றே. 14

அரித்தெடுத்த முயலகனை அழித்தொழித்தே வாழ்வை
அரிவைக்கன்(று) அளித்ததுவும் அருட்தொண்டே யன்றோ
விரித்த படத்(து) அரவதனால் உயிரிழந்தான் தன்னை
வியப்புறுமா(று) எழுப்பியதும் வியன்தொண்டே யன்றோ
எரித்தெடுத்த எலும்பினையும் எழில்மிக்க பெண்ணாய்
எழுப்பியதும் தொண்டன்றோ முதலைவாய் தன்னாள்
மரித்தொழிந்த மகனையுமே உயிரோடு தந்த
மாட்சிமிகு தொண்டினையும் மறந்திடுவார் யாரே? 15

விரித்துரைத்த இத்தகைய தொண்டுகளை நந்தம்
மேன்மையுறு திருமுறைகள் வியந்தோதிற் றென்றால்
உரித்தான நெறிகளிலே தொண்டுநெறி யொன்றே
உயர்வான நெறியென்றால் மறுத்திடுவா ருண்டோ?
அரித்தான இத்தொண்டால் வீடடைந்தார் என்றால்
அறிவிப்ப(து) அழகில்லை அதன்சிறப்பை மேலும்
சிரித்தமுகத்(து) அறிவுடையீர் சிந்திப்பீர் என்றன்
சிற்றறிவுக் கெட்டியதைச் செப்பிவிட்டேனிங்கே. 16

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

### Dharmapuram Adhinam

**Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil.**

I was greatly impressed by this great temple. It is well maintained. One feels perfectly at peace inside the temple, and I wish I could come here more often to pray. The temple authorities have been very helpful.

(Sd.) C. R. Sundararaj,
Surgeon
Govt. General Hospital, Madras.

25—11—66.

The temple is very neatly kept. I am much impressed by the songs of the odhuvar of the temple.

(Sd.) M. Umapathy,
Advocate, Madras.

# அப்பர் அருள்முரசு*

செஞ்சொற்கொண்டல், வித்துவான்,

திரு. சொ. சிங்காரவேலன் M. A., Dip. Ling.

(மலர் 25, இதழ் 12. பக்கம் 581 இன் தொடர்ச்சி)

**நெறியும் அவனே :**

26. வீட்டுலகம் மிகச் சேய்மையில் உள்ளது என்று கவலையுற வேண்டா; அவ்வுலகமும் அவனே, அதற்குச் செல்லும் நெறியும் அவனே. **(189)**

**திருவடி தரித்தேன் :**

27. அவனைக் காணுதல் வேண்டும்; காணுதல் வேண்டும் என்பதே என்கருத்து: அவ்வாறே நினைந்திருந்தேன்; என் கருத்துப்படி அவனும் மனம் புகுந்தான்; அவன் திருவடியை நானும் தரித்துக் கொண்டு பெரும்பேறு பெற்றவன் ஆனேன். **(198)**

**என்ன குறை எனக்கு :**

28. நீ புண்ணியன்; புனிதன்; உன் திருவடி என் உள்ளத்தில் இருக்கப் பெற்றேன் எளியேன்; இனி என்ன குறை எனக்கு! **(201)**

**பிறப்பின் மீது வெறுப்பு :**

29. பிறப்பு இனி எனக்கு உண்டோ! உண்டானால் பிணி அடைந்து, உடல் வருந்திப்பின் இறத்தலும் உண்டு; ஆதலால் நான் பிறப்பினை வெறுக்கின்றேன். பெருமானே! அறத்தையே விரும்புகிறேன்; காமம் முதலிய அறுவகைக் குற்றங்களினின்றும் நீங்கி உன்னருளால் தூயனாய் நான் இப்போது விளங்குகிறேன். **(205)**

**பத்தர்கள் சித்தத்துள் :**

30. நீண்டநாள் நின்னைத் தேடினேன்; காணவியலாது கவன்றேன், பாடி, அதனுடன்பணிந்து, மேலும் 'பல்லாண்டு! பல்லாண்டு!' என்று இசைபாடுகின்ற பத்தர்கள் சித்தத்துள் புகுந்தபோது உன்னை அங்குக் கண்டு கொண்டேன்! விடுவேனே, இனி! (207

**போகவிடுவேனே :**

31. எவ்வளவு முயன்று உன்னை என் நெஞ்சுக்குள் பிணித்துக் கொண்டிருக்கிறேன்! இனிப் போகவிடுவேனே! தவறியும் பிரிய விட்டுவிடமாட்டேன்; விழிப்பாக இருந்து காத்து வருவேன். (204)

**தொழாத நாட்களும் தொழும் நாட்களும் :**

32. இறைவா! நின்னைத் தொழாத நாட்கள் துன்பம் உடையவை; நின்னைத் தொழும் நாட்களோ இன்பம் உடையவை. (216)

**திருவடிகட்கு வருத்தமின்றே :**

33. தில்லையில் ஆடுகின்ற அத்தா! உன் ஆடல் காண்பதற்காகவே அடியேன் வந்துள்ளேன்; நீ அந்தியும் ஆடுகின்றாய்; பகலும் ஆடுகின்றாய்; உன் திருவடிகட்கு வருத்தம் நேராதோ? (232)

**பொய்மை நீங்க :**

34. இறைவா! பொய்மைக் குணங்கள் என்னை விட்டு நீங்குதல் வேண்டும், நான் உனக்கே அடிமை செய்யவேண்டும்; நீ இதனை அருளிச் செய்வாயாக. (235)

**நல்வழி :**

35. இந்தப் பொல்லாத உடலைப் போக்க வேண்டுமா? உள்ளத்துள்ளே இறைவன் திருவடியை உணருங்கள்; அதுவே நல்வழி. (251)

**என் நிலை :**

36. இந்த உடல் ஒரு குடிசை; இதற்குள் தொண்ணூற்றாறு தத்துவங்கள் என்று பேசப்படுவோர் 'எனக்கு என்ன

வேலை? எனக்கு என்ன வேலை' என்று கேட்டுக் கேட்டு வருத்துகின்றார்கள்! இத்தத் தொல்லை தீர இறைவன் திருவடி நினைவே மருந்து; அதனைப்பற்றியவர்களுக்கு இத்தகைய வேதனைகள் என்றும் இல்லை. (252)

**என்று காண்பேன்:**

37. இந்த உடல் பொய்யே போர்த்த போர்வை; அவ்வப்போது அழுகி விழுகின்றது. நானோ தூயனாய் வாழ இயலாதவனாய் உள்ளேன்; என் ஐம்புலன்களோ ஒன்றையொன்று மிஞ்சி என்னை வெவ்வேறு விருப்பங்களில் இழுக்கின்றன; நான் எப்போது நின் திருவடிகளாகிய செந்தாமரை மலர்களைக் காண்பேன்? (260)

**கயிற்றூசல்:**

38. கயிற்றில் கட்டப்பட்ட ஓர் ஊஞ்சல் அங்கும் இங்கும் ஆடுவது போலவே என் நெஞ்சும் ஒன்றைப் பற்றுவதும், அதனை விட்டு மற்றொன்றைப் பற்றுவதுமாக ஆடிக்கொண்டேயிருக்கிறது. உன்பாதத்தை நான் அடைந்தபோதே அந்த நெஞ்சின் ஆட்டம் அடங்கிற்று. ஊஞ்சலின் கயிறு அற்றால், அது ஆட்டம் தவிர்ந்து தரையில் அசையாமற் கிடக்குமோ அப்படி நின் பாதத்தில் என் நெஞ்சு அடங்கிக் கிடந்தது. (264)

**மன்றத்துப் புன்னை:**

39. ஊருக்கு நடுவே ஒரு மன்றம்; அதிலே ஒரு புன்னை மரம், அதற்குத்தான் எவ்வளவு துயரம்! ஊர்ப்பொது ஆதலால் வருவோர் போவோரெல்லாம் அதன் பட்டையைப் பெயர்ப்பதும், தழையை அறுப்பதும். கல்லெறிந்து காய்களை உதிர்ப்பதும், பூக்களை உதிர்ப்பதும் முதலிய எல்லாம் செய்வர்; வாயிருந்தால் அந்தப் புன்னை என்னவெல்லாம் பேசும்! ஆம்; நானும் அப்படித்தான். என்னையும் அந்தப் புன்னையுடன் ஒப்பிடுகிறேன். என் துயரங்கள் தாம் எத்துணை? உன்னை உள்ளம் வைத்துப் போற்றி, உனக்கே உரியவனாக நான் ஆகும் நாள் எந்த நாள்? உனக்குரியவனாக நான் ஆகிவிட்டால், பொது இடத்துப் புன்னை மரம் அடையும் பொல்லாங்குகள் போல, என்னை வருத்துவார் யாரும் இல்லை; இவன் சிவன் அடியான் என்று கருதித் துயரம் செய்ய மாட்டார்கள். (266)

**நரியைப் போன்றோர்:**

40. ஒரு நரி வாயில் தசையுடன் இருந்து உண்ண இடம் தேடி ஓடிக்கொண்டிருந்தது; இடையில் நீர்வழி ஒன்றைக்

கண்டது; அதில் வரால்மீன் ஒன்று துள்ளிக் குதித்தது; அதைக் கண்டதும் ஆசை வெறிமூண்ட நரி நீரில் பாய்ந்தது; வரால் மீனும் போயிற்று; வாயில் இருந்த தசையும் நீரோடு போயிற்று. என்ன ஏமாற்றம்! இத்தகைய பேராசை சிலருக்கு, அவர்களது மனமயக்கத்தைத் தீர்த்து, அறிவில் தெளிவுண்டாக்குபவன் இறைவன் ஒருவனே. (273)

## பேதைமார் நிலை :

41. முற்பகலில் உணவு சமைத்தால் நேரத்தோடு உண்ணலாம்; பசியும் தீரும். பிற்பகலில் உணவு சமைக்கத் தொடங்கினால், உண்பது எப்போது! அத்தகைய பேதைமாரைப் போன்றேன் நான், வாழ்வின் முற்பாதியெல்லாம் இறைவனை நினையாது, அங்கும் இங்கும் ஓடி இருமி, கருத்தழிந்து போனேன்; பிற்பாதியில்தான் அவனை நினைக்கும்பேறு பெற்றேன்; என்னே என் பேதைமை? (278)

## என் பேறு :

42. இறப்பினுக்குப் பயப்படுவேனோ, இறைவா! கடக்க வியலாத பெருங்கருணைக் கடலாகிய உன்னை யன்றோ அடைந்து விட்டேன்! கருணை மலையாகிய உன் உச்சியை யன்றோ வந்தெய்திவிட்டேன்! என்னே என்பேறு? (279)

## நானும் தானும் :

43. எப்போதாவது என் நெஞ்சில் ‘நான், நான்’ என்ற எண்ணம் மேலிட்டால், அதனை அடக்கித் ‘தான், தான்’ என்று என்னைக் காத்து மொழிகின்றான் கடவுள். (284)

## விளக்கை யேற்றுக :

44. விளக்கிட்டுத் தூபமிட்டுப் பணி புரிந்தால் அவன் அருளைப்பெறலாம்; புறவிளக்கு மட்டும் போதாது; உள்ளம் என்ற திரியிலிட்டுச் சுடர் கொளுத்தினால் அவனை உணரலாம் (304)

## கரும்பின் கட்டி :

45. பெரும்புலர் காலையில் முழுகுதல் வேண்டும்; அன்பு கொண்டு, மலர்கள் பறித்து அருச்சித்து; விளக்குப் பணியும் தூபப் பணியும் புரிந்தால் கரும்பினிற் கட்டிபோல் இனிப்பான் இறைவன். (307)

**கழியிடைத் தோணி:**

46. கடலுக்குப் பக்கத்தில் உப்பங்கழிகள் உள்ளனவே; அவற்றில் தண்ணீர் எதிர்கொண்டு பாயும்; கடல் நீருக்கு எதிர் நின்று மறிக்கும். அதில் தோணி ஒன்று மாட்டிக்கொண்டால் அதன் நிலை என்ன ஆகும்? நானும் அந்நிலையில் உள்ளேன்; ஐம்புலன்களால் அங்கும் இங்கும் அலைக்கப்படுதலால் அந்தத் தோணியும் நானும் சமமே. (309)

**பாழ்க்கு நீரா:**

47. வளமான பயிர்க்கு நீர் இறைத்தால் பயன் உண்டு; வெறும்பாழ்க்கு நீர் இறைத்தால் என்ன பயன்? என் முயற்சிகளும் அப்படியே ஆயின. அறிவில்லாத கயவர் பட்டுத்தான் அறிவார்கள் என்பது என்னளவில் உண்மையே ஆயிற்று. (311)

**அவன் தந்த வீடு;**

48. மறைக்காடு என்ற தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவன் தந்த வீடே இவ்வுடல்; இருகால்கள்; இருகைகள் அதன்மேல் தசை போர்க்கப்பட்டுள்ளது; தோல் மேற்பூச்சு இரத்தநீரால் சுவரெடுக்கப் பட்டுள்ளது; இரண்டுவாசல் உள்ளன; ஏழு சாளரங்கள்; இந்த வீட்டிற்குள் உயிரை வைத்து, அந்த உயிர்க்குள் அன்பையும் அமைத்துள்ளான் இறைவன். (327)

**நெறியும் நிலையும்:**

49. பேய் அடையத் தக்கபொருள் இறைவன்; அடையும் நெறியும் அவனே.

**காணஇரண்டிடம்:**

50. இறைவனைக் காணும் இடங்கள் இரண்டு; வாழ்த்துகின்றவர்களின் வாய்கள், சிந்திப்பவர்களின் சிந்தைகள் - ஆகியவையே அவை. (371)

**இரத்தலும் கரத்தலும்;**

51. இரப்பவர்க்கு ஈயும் உள்ளத்தில் கருணையும் அவனே; அந்தக் கொடையாளர்க்குக் காட்டும் அருளும் அவனே.

வைத்துக் கொண்டே இல்லை யென்று கரக்கும் கொடுமக்களுக்கு நரகங்கள் காட்டுபவனும் அவனே. (303)

**அன்பே பொருள் :**

52. இறைவனுடைய எல்லையற்ற பொருள் எது? தொண்டர்கள் கூடிக்கூடி ஆடிப்பாடி அழுது தொழுகின்றார்களே; அத்தனைக்கும் அடிப்படையாகிய அன்பே அவனுடைய பொருள் (399)

**அகமே கோயில் :**

53. மலர்கொய்து மலர்கொய்து தேய்ந்த நகங்கள்; பூத்தூவிவழிபடும் கரங்கள்; கண்ணீர் மல்கும் முகம்; இத்தனையும் வாய்ந்த தொண்டர்களின் அகத்தையல்லது வேறு கோயில் இறைவனுக்கு இல்லை. (401)

**நூலறிவு :**

54. நூல்களை ஓதியே காலம் கழிக்கின்ற, உலகத்தவர்களே! ஒருவன் ஆகிய இறைவனை நீதியால் நினைவீர்களாக; அழுக்கற்ற தூய அப் பரம்பொருளே துணை. (412)

**உடல் நீர்நிலை :**

55. இந்த உடல் ஒருமுழம் உள்ள நீர்நிலை போன்றது; அதன் அகலம் அரை முழம்; அதிலோ ஐந்து முதலைகள் உள்ளன; அவற்றினின்று மீள இறைவனே துணை புரிவான்.

**தலைவர்க்கும் தலைவர் :**

56. தலைவர்க்கெல்லாம் தலைவர் ஆகவேண்டும் என்ற எண்ணம் உங்கட்கு உண்டா? கச்சி ஏகம்பத்துக் கடவுளைத் தலையினால் தொழ அப்பேறு வாய்க்கும். (436)

**நிலையும் நினைப்பும் :**

57. உள்ளத்திலே கொடுமை வைத்து, உடலை ஓம்பினேன் நான்; காம்பில்லாத கரண்டிபோல எண்ணியவற்றை முடிக்கும் திறமும் எனக்கில்லை; ஆனால் என் நினைப்போ பலப்பல; பாம்பின் வாய்ப்பட்ட தேரையின் நினைப்பைப் போன்றது அது. இறைவா! நீயே என்னை உய்வித்தருள வேண்டும். (454)

( தொடரும் )

# ஐயனர்

வேதாந்த சிரோமணி,

பிர்மஸ்ரீ. K. இராஜகோபால சாஸ்திரிகள்

தென்னுட்டில் ஐயனர், மாரியம்மன், காளி, பத்ரகாளி முதலிய பல தெய்வங்கள் கிராம தேவதைகளாகப் பூசிக்கப்படுகின்றனர்.



சிலர் இந்தத் தெய்வங்களைக் குலதெய்வமாகவும் பூசித்து வழிபடுகின்றனர். ஐயனருடைய ஆலயம் கிராமத்திற்கு வெளியில் தென்மேற்கு மூலையில் இருக்க வேண்டும் என்று ஈசானசிவ குருதேவபத்ததியில் கூறப்படுகிறது. மேலும் ஐயனர் கிராமத்திற்குப் பராங்முகமாக ஸ்தாபிக்கப்படவேண்டும் என்றும் கூறுகிறது.

இந்த ஐயனர் சாஸ்தா, ஹரிஹர புத்ரன், என்று கூறப்படுகிறர். சில விடங்களில் கையனர் என்றும் இவரைச் சொல்லுவர். கிராமத்தைப் பரிபாலனம் செய்தலின் சாஸ்தா (பரிபாலனம் செய்பவர்) என்பர். பாலனஞ் செய்பவரை ஐயன் என்று சொல்லுவது வழக்கமாதலின் ஐயனர் என்றும் கூறுவர்.

மோஹினி உருவமெடுத்த திருமாலுக்கும் சிவபெருமானுக்கும் இவர் பிறந்ததாகப் புராணங்கள் சொல்லுகின்றபடியால் ஹரிஹர புத்ரன் எனப்படுவர். பஸ்மாசுரனுடைய தவத்திற்கு மகிழ்ந்த சிவபெருமான் அவன் விரும்பியவாறு வரமளித்தார். அந்த வரத்தைச் சோதிக்க அவ்வசுரன் சிவபெருமானிடமே வந்தபொழுது சிவபெருமான் மறைந்தார். திருமால் மோஹினி வேடம் கொண்டு அந்த அசுரனை மயங்கச்செய்து அவன் பெற்ற வரத்தினலேயே அவனை மரிக்கச் செய்தார். பின்னர் வெளிப்பட்ட சிவபெருமான் மோஹினி உருவம் கொண்ட மாலுடன் சேர்ந்து ஐயனரைப் புத்ரனுக அடைந்தார் என்று ஒரு புராணம்

தேவரும் அசுரரும் ஒன்று சேர்ந்து மந்தரமலையை மத்தாகவும், வாசுகியைக் கயிறாகவும் கொண்டு பாற்கடலை அமிர்தத்தின் காரணமாகக் கடைந்தனர். அப்பொழுது வலியின் கொடுமை தாங்காமல் வாசுகி கக்கிய விஷம் பாற்கடலில் விழுந்து காலகூட விஷம் என்ற பெரிய விஷம் முதலில் உண்டாயிற்று. பயந்த தேவர் யாவரும் சிவபெருமானிடம் சென்று "தேவர்களில் முதல்வர் தாங்கள். பாற்கடலில் முதலில் உண்டான காலகூட விஷத்தை, முதல்வராகிய தாங்கள் அக்ர (முதல்) பூசையாக ஏற்று எங்களைக் காப்பாற்ற வேண்டும்" என வேண்டினர். கருணாநிதியான பரமேச்வரன், தேவரின் வேண்டுகோளின்படி நாவற்கனிபோல காலகூட விஷத்தை எடுத்து உண்டார். அவ்விஷம் சிவபெருமானுடைய கண்டத்தில் நின்றது. அதனால் சிவபெருமான் நீலகண்டன் ஆனார். பிறகு உண்டான கல்ப விருக்ஷம், காமதேனு, ஐராவதம், சந்திரன், கௌஸ்துபம், சிந்தாமணி முதலிய பல சிறந்த பொருள்களைத் தேவர்கள் பங்கு போட்டுக்கொண்டனர். கடைசியில் அமிர்த கலசத்துடன் தன்வந்தரி தோன்றினார். அமிர்தத்தைக் கண்டவுடன் அசுரர் அதை அபகரிக்க முயன்றனர். அப்பொழுது திருமால் மோஹினி உருவத்துடன் வந்து அசுரரை மயக்கி அமிர்தத்தைத் தான் பங்கிடுவதாகக்கூறிப் பெற்றுக்கொண்டு, அசுரரை வஞ்சித்து தேவரை அமிர்தபானம் செய்வித்தார். பிறகு மோஹினியுடன் சேர்ந்து சிவபெருமான் ஐயனாரைப் புதல்வராக அடைந்தார். (இக்காலத்தில் மோஹினி வாந்தி யெடுத்தது, அது கண்டகி நதியாக ஓடியது. அதிலிருந்த வஜ்ரம் என்ற பூச்சிகள் கூடு கட்டி வாழ்ந்தன. சாலக்கிராமம் உண்டானது முதலிய பல தொடர்பான கதைகள் கந்தபுராணத்தில் அசுரகாண்டத்தில் இந்திரன் இந்திராணிக்குக் கூறுவதாக அமைந்துள்ளன.)

தாருகாவனத்து ரிஷிகள் ஞானமார்க்கத்தையும் பக்தி மார்க்கத்தையும் கைவிட்டு கர்ம மார்க்கத்தைக் கைக்கொண்டு நிரீச்வர வாதிகளாய் வேள்விகள் செய்வதிலேயே ஈடுபட்டனர். வேள்வியினால் ஈச்வர ஆராதனை செய்யவேண்டும் என்ற வேத நெறியை மறந்தனர். அவர்களுடைய பத்னிகளும் அவர்களுக்கு அனுகூலமாகவே இருந்தனர். இவர்களை நல்வழிப்படுத்த சிவபெருமான் பிக்ஷாடன ரூபமும் திருமால் மோஹினி ரூபமும் கொண்டு தாருகாவனம் வந்தனர். பிக்ஷாடன ரூபத்தில் ரிஷிபத்னிகள் மயங்கி அவரைத் தொடர்ந்து சென்றதைக்கண்ட முனிவர் ஆபிசார யாகம் செய்தனர். அவ்வேள்வியினின்றும் தோன்றிய அரவம் முதலியவற்றைச் சிவபெருமான் அடக்கித் தனக்குப் பரிவாரமாகக் கொண்டார். பிறகு சிவபெருமான்

சேர்க்கையால் மோஹினி உருவம்கொண்ட திருமாலுக்கு ஐயனுர் தோன்றினுர் என்று வழுவூர் ஸ்தலபுராணம் கூறும்.

தோன்றிய ஐயனுர் சிவபெருமானுடன் சண்டையிட வந்து "உன்னுடைய ரத்தத்தைக் குடிப்பேன்" என்று சொன்னுர். அதனுல் சினமடைத்த சிவபெருமான் " நீ இரத்தம் குடிப்பவனுக இரு சூத்ரபூசை உனக்கு உண்டாகட்டும்" என்று சபித்தார். பிறகு ஐயனுரின் வேண்டுகோளுக்கு இரங்கி" மூவரைப் பூசிக்கத் தகுதியில்லாதவரும் உன்னைப் பூசித்து நற்கதியடையவேண்டும் என்ற கருணையால்தான் உனக்கு சூத்ரபூசை உண்டாகட்டும் என்று சபித்தேன், நீ யாவராலும் பூசிக்கப்படுவாய் என்று ஐயனுரைச் சாந்தப்படுத்தியதாகவும் காணப்படுகிறது.

ஹஸ்தம் = கை. ஹஸ்தநக்ஷத்திராபிமானி தேவதை ஐயனுர். ஆதலின் ஹஸ்த நக்ஷத்திராபிமானிதேவதை என்ற பொருளில் கையனுர் என்று சொல்லப்படுவதாக மலையாளத்தில் கூறுகின்றனர். தமிழ் நாட்டிலும் சிவபெருமானுக்கு பாமர மக்களைப்போன்று புதல்வன் உண்டானுன் என்று சொல்ல விருப்பமில்லாமையால், சிவபெருமான் மோஹினியின் கையைப் பிடித்ததாகவும். அதனின்றும் ஐயனுர் தோன்றியதாகவும் அதனுல் கையனுர் என்று பெயர் பெற்றுர் என்றும் கூறுவர்.

ஐயனுருக்கு வெளுத்த யானை வாகனம் என்றும், கறுத்த குதிரை வாகனம் என்றும் இரண்டுவிதமாகவும் காணப்படுகிறது. பூர்ணு, விஷ்கலா என்ற இரண்டு தேவிகளும் உண்டு. ஐயனுரைப்பற்றிய துதிகளில் பூர்ணு. புஷ்கலா என்று தேவிகள் கூறப்படுவது போலவே ஆலயங்களிலும் உள்ளது எனினும் பூசை செய்பவர்கள் பூர்ணபுஷ்கலா என்று ஒரே தேவி உடையவர் போலக் கூறுகின்றனர்.

ஐயனுரின் நிலை, ஆயுதம் முதலியவற்றின் வேறுபாட்டால் மகாசாஸ்தா, வேத சாஸ்தா, கால சாஸ்தா, தர்ம சாஸ்தா, கிராத சாஸ்தா என்று பல வகையாகக் கூறுகின்றனர்; ஸஹஸ்ர நாம ஸ்தோத்திரம், தர்ம சாஸ்தா, மகா சாஸ்தா இவர்களுக்கு தனித்தனி அஷ்டோத்தர சதநாம ஸ்தோத்திரங்கள், தனித்தனி அஷ்டகம், கவசம் முதலிய பல துதிகளும் உள்ளன.

**மகாசாஸ்தாவின் தியானம் :-**

1. கல்ஹாரோத்பல நீலகுந்தளபரம் காலாம்புத ச்யாமளம்
கர்பூர கலிதாபிராம வபுஷம் காந்தேந்து பிம்பானனம்
ஸ்ரீதண்டாங்குச பாசசூல விலஸத்பாணிம் மதாந்தத்விபா
ரூடம் சத்ரு விமர்த்தனம் ஹ்ருதி மகாசாஸ்தார
மாத்யம் பஜே.

2. தேஜோமண்டல மத்யகம் த்ரிநயனம் திவ்யாம்
பராலங்கிருதம்
தேவம் புஷ்பசரேக்ஷு கார்முகலஸத் மாணிக்ய
பாத்ரா பயம்,
பிப்ராணம் கரபங்கஜைர் மதகஜஸ்கந்தாதிரூடம் விபும்
சாஸ்தாரம் சரணம் பஜாமிஸததம் த்ரைலோக்யஸம்
மோஹனம்

மந்திரம் ;— ओं ह्रीं हरिहरपुत्राय पुत्रलाभाय शत्रुनाशाय मदगजवाहनाय महाशास्त्रे नमः

**கிராத சாஸ்தா தியானம் :-**

கோதண்டம் ஸசரம் புஜேந புஜகேந்த்ராபோக பாஸா
வஹன்
வாமேன ச்சுரிகாம் விபக்ஷதளனே பக்ஷேண தக்ஷேண ச
காந்த்யா நிர்ஜிதநீரத: புரபித: க்ரீடன் கிராதாகிருதே:
புத்ரோஸ்மாக மனல்பநிர்மல யசா நிர்மாது சர்மாநிசம்.

மந்திரம் :— ह्रीं किरातवपुषे नमः

**தர்மசாஸ்தா த்யானம் :-**

ஸ்நிக்தாராளவிஸாரிகுந்தலபரம் ஸிம்ஹாஸநாத்
யாஸிநம்
ஸ்பூர்ஜத்பத்ரஸு க்லுப்தகுண்டலம தேஷ்விஷ்வாஸ
ப்ருத்தோர்யுகம்
நீல க்ஷௌமவஸம் நவீனஜலதச்யாமம் ப்ரபா ஸத்யகா
ஸ்பாயத் பார்ச்வயுகம் ஸுரத்னஸகலாகல்பம்
ஸ்மரேதார்யகம்

மந்திரம் :— घ्रूं पराय गोप्त्रे

சாஸ்தாவின் காயத்ரீ— भूतसेनाय विद्महे भवपुत्राय धीमहि । तन्नः शास्ता प्रचोदयात्

இந்த சாஸ்தா பாண்டிய வம்சத்தில் அவதரித்ததாகவும் கேரளதேசத்தில் பல லீலைகளைச் செய்ததாகவும் ஸ்துதிகள் கூறுகின்றன. இவருடைய பரிவார தேவதைகள், சக்திகள் பிரதிஷ்டாமுறை முதலியவற்றை ஈசான சிவகுருதேவபத்ததியில் விரிவாகக் காணலாம். சேரமான்பெருமாள் நாயனார் கைலாயத் தில் பாடி அரங்கேற்றியதும் பதினோராம் திருமுறையிலுள்ளது

மான ஞானவுலா, திருப்பிடவூர் ஐயனர் மூலமாக வெளிவந்தது என்பதை அவ்வூரில் ஐயனர் கையிலுள்ள சுவடியினல் விளக்குகிருர்.

சோழமன்னன் ஒருவன் பல வடமொழிப் புலவருடன் வடநாட்டு யாத்திரை சென்ருன். தெலுங்கு நாட்டில் ஓரிடத்தில் ஐயனர் மூக்கில் விரலை வைத்துக்கொண்ட கோலத்தில் காணப் பட்டார். ஐயனர் நினைத்திருப்பதைக் கூறினல் அவர் விரலை மூக்கிலிருந்து எடுத்துவிடுவார், என்று அரசனல் வினவப்பட்ட அங்கிருந்தோர் கூறினர். உடனே மன்னன் அருகிலிருந்த பண்டிதர்களை ஐயனர் நினைப்பது என்ன? என்பதைத் தெரி விக்கும்படி கூறினன். ஒருவர் "நான் விஷ்ணுவின் புதல்வன் ஆகவே பிரமனுக்குச் சமம், நான் பாக்யசாலி தேவர்களால் வணங்கப்படுகிறேன். எனினும் சிவபெருமானின் புதல்வனுக இருப்பதால் பூதபிசாசுகளால் சூழப்பட்டிருக்கிறேன் என்று கவலைப்படுகிருர்" என்று பொருள் உடைய

விஷ்ணேஸ் ஸுதோஹம் விதினு ஸமோஹம் தன்யஸ்ததோ
ஹம் ஸுரஸே விதோஹம்! ததாபி பூதேச ஸுதத்வஹே
தோர், பூதைர் விருதச்சிந்த யதீஹசாஸ்தா"

என்ற சுலோகத்தைக் கூறினர். ஐயனர் விரலை எடுக்க வில்லை. அப்பைய தீக்ஷிதர் என்ற கவி - தந்தை எவ்வளவு பெண்களை மணந்தாலும் தனயனுக்குத் தாயாதலின், பார்வதியை அம்மா என்று அழைப்பேன். லக்ஷ்மியை எப்படி அழைப்பது (தாய்க்கு மனைவியாயிற்றே) என்று வியப்புக்கொண்ட ஐயனரை இஷ்டத் தைப்பெறத் துதிக்கின்றேன்" என்று பொருள்படும்படி

அம்வேதி கௌரீ மஹமாஹ் வயாமி
பத்ன்ய: பிதுர்மாதர ஏவ ஸர்வா:
கதம்நு லக்ஷ்மீமிதி விஸ்மிதம் தம்
சாஸ்தார மீடே ஸகலார்த்த ஸித்யை

என்ற சுலோகத்தைச் சொன்னவுடன், ஆச்சர்யத்தால் மூக்கில் விரல் வைப்பது இயற்கையாகலின் ஐயனர் விரலை எடுத்தார் என்ற கதையும் வழக்கில் உள்ளது. இவ்விதமான ஐயனரை வணங்கி வழிபடுவோமாக.

ஸ்ரீ சபரிமலை ஸ்ரீ ஐயப்பா சரணம்! சரணம்! சரணம்!

வேளூர் தேவஸ்தானம் (வைத்தீசுவரன்கோயில்)

# இலவச சித்த வைத்தியசாலை,

## டாக்டர். K, இராமகிருஷ்ணன்

## தெய்வீகமூலிகை - வில்வம்

நட்சத்திர மண்டலத்தில் சந்திரனுடைய பாதையில் சஞ்சாரம் செய்யும் நட்சத்திரங்கள் இருபத்தேழும் பூவுலகில் தோன்றக் கூடிய உயிர்களிடத்தில் தொடர்பு இருப்பதாக சோதிட நூல் கூறுகின்றது. இவ்விருபத்தேழு நட்சத்திரங்களுள் "திரு" (தெய்வத்தன்மை பொருந்திய) என்ற அடைமொழி பெற்றிருக்கும் நட்சத்திரங்கள் இரண்டாகும். ஒன்று "திருவாதிரை" மற்றொன்று "திருவோணம்" திருவாதிரை சிவனுக்கும், திருவோணம் மகாவிஷ்ணுவுக்கும் உரிய நட்சத்திரம் என்பது யாவரும் அறிந்தது.

வானசாஸ்திர ஆராய்ச்சியாளர்கள், திருவாதிரையை எரி நட்சத்திரம் (சோதி) என்றும், திருவோணத்தை (காரிருள் மேகம்) குளிர்ச்சியான நட்சத்திரம் என்றும் கூறியிருக்கின்றார்கள். இவைகளை (Photo) படம் எடுத்து ஆராய்ச்சி செய்ய முற்பட்டபோது திருவாதிரை மட்டும் படம் விழுவதில்லை. ஆனால் (Film) படம் எடுக்கும் பில்ம் எரிந்துவிடும். ஆச்சரியமடைந்த பல விஞ்ஞானிகள் விடாமல் முயற்சி செய்ததில் ஒரு ஜெர்மானியர் வெற்றிபெற்றார். படம் காலையில் தோன்றக் கூடிய கதிரவன்போல் சோதிக் குழம்பாய்த் தோற்றம் அளித்தது.

படம் எவ்வாறு எடுக்கப்பட்டது என்பது குறித்து ஆராய்ந்தார்கள். காரணம் கிடைத்துவிட்டது. அதாவது அதிக குளிர்ச்சியுடைய "திருவோண நட்சத்திரம் அன்று திருவாதிரையின் சரிநேர் கோணத்தில் இருப்பதைக் கண்டார்கள். திருவாதிரையின் வெப்பத்தைக் குறைக்கக் கூடியது திருவோணமாகிய குளிர் நட்சத்திரம் எனக் கண்டார்கள்.

அதனால்தான் நம் முன்னோர்களாகிய சித்தர்கள் சிவனுக்குக் குளிர்ச்சி பொருந்திய வில்வத்தையும் அதிக குளிர்ச்சியில் இருக்கக்கூடிய மகாவிஷ்ணுவுக்கு வெப்பத்தைக் கொடுக்கும் துளசியையும் அர்ச்சிக்கக்கூடிய பச்சிலைகளாக வைத்தார்கள் போலும்.

நம் சரீரத்திற்கு, ஒன்று உஷ்ணத்தால், மற்றது குளுமை யால், உண்டாகக்கூடிய வியாதிகள் எனப் பிரிக்கலாம். அதிக உஷ்ணத்தால் ஏற்படக்கூடிய வியாதிகளுக்கு வில்வம் சேர்ந்த மருந்துகளால் பரிகாரம் செய்யப்படுகின்றன.

வில்வம், வடமொழியில் "பில்வம்" எனவும், இந்தியில் "வேல்" எனவும், லத்தீன் மொழியில் (Aegle Marmelos) எனவும், ஆங்கிலத்தில் (Bael Tree) எனவும் வழங்கப்படுகின்றது. இவற்றுள் 5, 7, 9, 11 இதழ்களைக்கொண்ட வில்வ தளங்கள் சிவபூசைக்குச் சிறந்ததாகவும் கருதப்படுகின்றது. காசியில் முள் இல்லாத வில்வம் அதிகம்.

வில்வம் (சங்கோசனகாரி) அதாவது சரீரத்தை ரத்தம், சீழ் முதலியவைகள் வெளிப்படாமல் சுருக்கி வத்தலாக்கக் கூடிய தன்மையுடையது. (Antibioties) அதனால்தான். சமாதி கிரியை களில் விபூதியுடன் வில்வத்தையும் சேர்க்கிறார்கள் போலும்.

இதன் பூ, பிஞ்சு, காய், பழம், பிசின், பட்டை, வேர், இலை இவைகளை துர்ப்பலமுடைய குடலுக்கு வலு ஊட்டக்கூடியதாக வும் கிருமி நாசினியாகவும் பயன்படுகின்றது.

இனிப்பு, துவர்ப்பு, வீரியம் வெப்பம், கார்ப்பு ஆகிய குணங் களை யுடையது. கண் எரிச்சல், கபால வலி, தேக அழற்சி, மூளையைப் பற்றிய ரோகம், இவைகளை நீக்குவதுடன் உடலுக்கு அழகையும் புஷ்டியையும், வன்மையையும் உண்டாக்குகின்றது. ரத்தபேதி, அதிசாரம், கிரகணி, மலச்சிக்கல், மாலைக்கண், வாத குன்மம், வாயு, பித்தசோகை, நீரேற்றம், சன்னி, உடல் வலி, அக்கினி மாந்தம், அரோசகம், விக்கல். பித்த சுரம், ஆண் பெண்ணுறவால் உண்டாகும் உஷ்ண ரோகங்களையும், வெட்டை, கிரந்தி, மேகம், குஷ்டம் போன்ற கொடிய ரோகங் களையும், குணப்படுத்தும் ஓர் சிறந்த மூலிகை. வாத பித்த சிலேத்துமத்தை சமன் செய்யக்கூடியது.

1. வில்வப்பூ, பிஞ்சு இரண்டையும் இந்துப்புடன் சேர்த்து ஒரு விராகனிடை மல்லி, சுக்கு, சோம்பு, ஏலம், ஆரஞ்சுப்பழத் தோல் ஆகியவையுடன் கஷாயம் செய்து உட்கொண்டால் குடலில் ஏற்படும் புண், குன்மம் (Peptic Ulcer) (Duodenum) Ulcer) குணமாகும்.

2. இலை சகல மேகரோகங்களையும் போக்கும். சூரிய உதயத்திற்கு முன் மிளகுடன் சேர்த்துச் சாப்பிட வேண்டும்.

குழந்தைகளுக்குக் காணும் கணை 18-ம். கிரந்தி வகைகளும் வயிற்ருேட்டம், வாய் வேக்காளம், அஸ்திச்சூடு, எலும்புருக்கி இவைகளை நீக்கி மேனியை அழகு செய்வதில் நிகரற்ற மூலிகை யாகும்.

**வில்வப்பிசின் :**

முற்றிலும் கெட்டு நீர்த்துப்போன சுக்கிலத்தை கெட்டிப் படுத்தி ஆண்மையை உடையவனுக்கும். நல்ல ஞாபக சக்தியைத் தரும்.

வில்வப் பட்டையிலிருந்து தயாரிக்கும் வில்வாதி லேகியம் நவமூலத்தையும், குன்மம், சுக்கில நாசம், எலும்புருக்கி (T. B.) மலச்சிக்கல் ஆகிய கொடிய வியாதிகளையும் போக்கும். தினம் வில்வத்தளிரை கற்ப முறைப்படி உண்டு வந்தால். இரைப்பை குற்றம், உடல் பலகீனம், சொரி, நமைச்சல், அரிப்பு, புண். புரைகள், நாளடைவில் குணமாகி உடல் தங்கம்போல் பிரகாசிக்கும்.

பெண்கள் உண்டு வந்தால் சூதகம் தடைபடுதல், சூதகவலி, மிகச்சூடு, சோமரோகம், கை கால் எரிச்சல் முதலியவற்றுடன் கர்ப்பாசயத்தையும் சுத்திசெய்யும். மண்டைக் கரப்பானுக்கு, மயிரை நீக்கிவிட்டு வில்வ இலையுடன் பச்சரிசி மாவும் கிண்டி கட்டினல் சீழ் வெளிப்பட்டு குணம் ஆநம்

இரவில்]பசும்பாலுடன் வில்வபிசினின் உலர்த்திய தூளுடன், சம எடை சீனகற்கண்டு, கசோர்க்காய், பாதாம்பருப்பு சேர்த்து சாப்பிட்டு வந்தால் சுக்கில சம்பந்தமான குறைகள் அறவே கீங்கிவிடும்.

**வில்வப் பழம் :**

சர்பத்து செய்து] சாப்பிட்டால் ரத்தம்| சுத்தியாகும். ரத்தக் கொதிப்பு (Blood presswre) நீங்கும். நல்ல பலன் ஏற்படும்.

வில்வப்பழம் 10 உடைத்து அதன் சத்தை 2 படி தண்ணீரில் நன்ருகக் கரைத்து ½ படியாகச் சுண்டவைத்து துணியில் வடி கட்டிய தண்ணிருக்குச் சமம் சீனி, சர்க்கரை சேர்த்து இளம் பாகு பதத்தில் 1 பலம் லவுங்கப்பட்டை, 1 பலம் சோம்பு, 1 பலம் கிராம்பு இவைகளைத் தூள்செய்து அதனுடன் கலந்து 10 எலுமிச் சம் பழச்சாறுடன் கலந்து எடுத்துவைத்துக்கொண்டு காலை மாலை ஒன்று அல்லது இரண்டு அவுன்ஸ் வீதம் வெந்நீர் கலந்து சாப்பிடலாம்.

பெண்களுக்கு உஷ்ணத்தால் ஏற்படும் வெட்டைச்சூடு, வெள்ளைக்கு வில்வ இலை 10 பலம் இடித்து மிளகு, சோம்பு $\frac{1}{4}$ பலம் சேர்த்து 1 படி தண்ணீரில் கொதிக்கவைத்து $\frac{1}{4}$ படியாகக் காய்ச்சி வடிகட்டி சிறு கற்கண்டு, பசு வெண்ணெய் சேர்த்து $\frac{1}{2}$ மண்டலம் சாப்பிட்டால் கெர்ப்பப்பை கோளாறு அறவே நீங்கும்.

இம்மாதம் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்ற நோயாளிகளின் எண்ணிக்கை.

| | |
|---|---|
| ஆண்கள் | 1104 |
| பெண்கள் | 961 |
| குழந்தைகள் | 799 |
| | 2864 |

## EXTRACT FROM THE VISITORS' BOOK

### Dharmapuram Adhinam

### Velur Siddha Vaidya Sala, Vaithiswarankoil.

I have been suffering from 'Rheumatoid arthritis' from 1961. Only in 1961 or so the disease was diognoised as such.

Even during my boy-hood I had had attacks of rheumatism. In 1961 (Feb) all on a sudden my right eye was affected. The eye became red, the vision became blurred and I was losing sight. After treatment at the eye hospital, Vellore, I was cured of my eye disease only temporarily. A few weeks after the treatment the left wrist was affected. There was swelling accompanied by pain. When I contacted the specialists at the C. M. C. Hospital Vellore, they diognoised the disease as rheumatoid arthritis, for which there is no permanent cure in this allopathic system, they said, after trying several courses of injections and al, tablets.

From 1961 to 1966 I have tried all allopathic. ayurvedic and homeo treatments without success and was in a state of despair. Accidentally I came to know about Dr. K. Ramakrishnan of the Dharmapuram Adhinam, through the student of mine. Immediately I rushed to this place. I narrated my sad tale to him. He heard my case patiently and after thorough examination he assured me of permanent cure and advised me to stay for 3 days. Accordingly I stayed and took the medicine and now I feel better.

From the way he has diognoised the disease and from the several written reports of permanent cure of many achronic disease, I hope that he will certainly rootout this chronic disease of mine.

May Almighty God give him a long and prosperous life and crown his work with success.

(Sd.) V. A. Maria Susai, M. A., L. T.
Principal, Govt. Training College,
Vellore, at Katpadi Ex.

---

**EXTRACT FROM THE VISITORS' BOOK**

Dharmapuram Adhinam

Sri Vaithianathaswamy Devasthanam, Vaithiswarankoil.

We were enthrilled by this ancient temple. Not only has it been well cared for but it is also clean and neat. One felt while walking around that one was going further and further back in history. We wish to thank the authorities in the temple for their equisite courtesy and generosity.

(Sd.) S. E. Kimpleton (England)
(Sd.) John Paul (Canada)
(Sd.) Ane Bilde (Denmark)
(Sd.) Marie Bano (Sweedan)
13—11—66. (Sd.) Steeffan Lindbey (Sweedan)

## EXTRACT FROM THE VISITORS' BOOK

### Dharmapuram Adhinam

Sri Kambahareswaraswami Devasthanam, Tirubuvanam.

I had the unique fortune of visiting this temple with my family on a Sunday. The temple authorities gave me all the fecilities to worship Vigneswarar, Iswarar, Ambal and Sarabeswarar. We were very much delighted with the calm atmosphere that is existing in the temple keeping the devinity in its proper form, apart from the neatness of the temple which is worth mentioning. This is one of the important temples worth visiting.

(Sd ) S, Subramaniam.
6—11—66. Addl. P. A. to Collector,
Thanjavur

நான் இன்று இக்கோயிலைக் குடும்பத்துடன் வந்து தரிசனம் செய்தேன். கோவிலில் வேலை பார்ப்பவர்கள் நல்ல முறையில் வரவேற்று தரிசனம் செய்துவைத்தார்கள். தருமபுரம் ஆதீனத்தில் உள்ள கோவில்கள் எல்லாமே நல்ல முறையில் நிர்வாகம் செய்வதற்குப் பயர்போனது. அதற்கு இந்தக் கோயிலின் நிர்வாகம் எடுத்துக்காட்டு.

(ஒ-ம்.) சிவ. குஞ்சிதபாதம்
*20—11—66.* துணை தாசில்தார், திருவிடைமருதூர்.

Sri Vaithianathaswamy Devasthanam, Vaithiswarankoil

The Dharmapuram Adhinam is reputed for the keen care they take in the maintenance of temples and Vaithiswarankoil is a noble example thereof. The staff are very courteous and devoted lot.

(Sd.) Ramanath
25—11—66. Examiner of L. F. Accounts,
Dy. Secretary to Govt Finance,
Madras.

# செய்திகள்

**தருமையாதீனத்தில் :**

## ஸ்ரீ மெய்கண்டதேவர் குருபூஜை விழா

ஐப்பசித் திங்கள் 26 ஆம் நாள் (11—11—66) வெள்ளிக் கிழமை காலை 9-மணிக்கு ஸ்ரீ ஞானபுரீசுவரர் ஆலயத்தில் சந்தான குரவருள் முதல்வராகிய ஸ்ரீ மெய்கண்ட தேவருக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் சிறப்பாக நடைபெற்றன. மாலை 6-மணிக்குச் சொற்பொழிவுகள் நடைபெற்றன. வித்துவான் ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் "மெய் கண்ட தேவர்" என்ற பொருள்பற்றியும், மகாவித்துவான், திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள், "சிவஞான போதம்" என்ற பொருள்பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

ஆதீன ஓதுவாமூர்த்திகள் தேவார இன்னிசை நிகழ்த்தினார் கள். அன்பர்கள் பலர் கேட்டு மகிழ்ந்தனர்.

## கம்பராமாயண விரிவியற் சொற்பொழிவு.

தருமையாதீனத் தமிழ்க் கல்லூரி ஸ்ரீ குருஞானசம்பந்தர் மாணவர் கழகத்தின் சார்பில் 29, 30—11—66 இரண்டு நாட்களி லும் கம்பராமாயண விரிவியற் சொற்பொழிவு மாலை 2-45 மணி முதல் தொடங்கி நடைபெற்றது.

29—11—66 செவ்வாய்க்கிழமை அன்று 'தமிழ்க்கடல் சிவம் பெருக்கும் சீலர், சிவமணி, திரு ராய. சொக்கலிங்கம் (இயக்குநர் தமிழாராய்ச்சித்துறை, காரைக்குடி) அவர்கள், "கம்பனின் பாத்திரப் படைப்புகள்" என்ற பொருளில் பேருரையாற்றினார் கள். கல்லூரி முதல்வர், திருநெறிச்செம்மல் வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்கள். முடிவில் வித்துவான், ஸ்ரீமத் சோம சுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் நன்றி கூறினார்கள்.

கந்தசஷ்டி உற்சவம் சிறப்பாக நடைபெற்றது. காலை மாலை இரு வேளைகளிலும் ஸ்ரீ வல்லிதேவசேனா சமேத ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருவீதி வலமாக எழுந்தருளி அருட்காட்சி வழங்கியதை அன்பர்கள் தரிசித்து மகிழ்ந்தனர். 17—11—66 வெள்ளி அன்று இடபவாகனத்தில் சகோபுரதரிசனக் காட்சியும், 18—11—66 அன்று சூரசம்ஹாரமும் மயில்வாகனக் காட்சியும் 19—11—66 அன்று திருத்தேர்த் திருவிழாவும் சிறப்பாக நடைபெற்றன. விழா நாட்களில் கந்தசஷ்டி விரதமனுஷ்டித்து வழிபட்டு அன்பர்கள்பலர் முருகன் அருளைப்பெற்றனர். கந்தசஷ்டியை முன்னிட்டு லக்ஷார்ச்சனை தொடங்கி நாள்தோறும் நடை பெற்றது 18—11—66 அன்று லக்ஷார்ச்சனை பூர்த்தியாயிற்று. அன்பர்கள் பலர் அதில் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

சஷ்டி விழாவில் முருகன் வரலாறுகளை அன்பர்கள் உணர்ந்தும், கேட்டும் பயன்பெறும் வண்ணம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் அருளாணைப்படி 13—11—66 ஞாயிற்றுக் கிழமை முதல் 19—11—66 சனிக்கிழமை முடிய உள்ள நாட்களில் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், மகா வித்துவான், திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்களால் கந்தபுராணச் சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. உற்பத்திகாண்டம், அசுரகாண்டம், மகேந்திரகாண்டம், யுத்த காண்டம், தேவகாண்டம், தட்சகாண்டம், வள்ளியம்மைத் திருமணம் என்ற தலைப்புக்களில் சொற்பொழிவு நடைபெற்றது. அன்பர்கள் கேட்டு மகிழ்ந்தனர்.

வேளூரில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமிக்கு 13—11—66 ஞாயிற்றுக் கிழமை முதல் 22—11—66 செவ்வாய்க்கிழமை வரையிலுள்ள நாட்களில் கந்தசஷ்டி விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. காலை மாலை இருவேளைகளிலும் திருவீதியுலாக் காட்சியை அன்பர்கள் பலர் கண்டு களித்தனர். 18—11—66 வெள்ளிக்கிழமை சூரசம்ஹாரம் மயில்வாகனக் காட்சி 19—11—66 சனிக்கிழமை தீர்த்தங் கொடுத்தல், 20—11—66 ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீ தெய்வயானை திருக்கல்யாணம் 21—11—66 ஸ்ரீ வள்ளியம்மை திருக்கல்யாணம், 22—11—66 செவ்வாய்க்கிழமை ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேதராக ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி வெள்ளி

யிரதத்தில் திருவீதி வலமாக திருக்காட்சி வழங்குதல் முதலியன நடைபெற்றன. நாள்தோறும் அன்பர்கள் பலர் தரிசித்து முருகன் அருளைப் பெற்றனர்.

கந்தசஷ்டியை முன்னிட்டு சமயப் பிரசார மண்டபத்தில் மாலை 6- மணி முதல் சொற்பொழிவுகள் நடைபெற்றன. 17—11—66 வியாழக்கிழமை தருமையாதீனப் பல்கலைக்கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் வித்துவான் சிரோமணி திரு. வி. சபேசன் "கந்தரலங்காரம்" என்ற தலைப்பிலும் 18—11—66 வெள்ளிக் கிழமை தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பொறுப்பு முதல்வர் திருநெறிச்செம்மல் வித்துவான், திரு. வி. சா. குருசாமிதேசிகர் அவர்கள் "திருப்புகழ்" என்ற தலைப்பிலும் சொற்பொழி வாற்றினார்கள். அன்பர்கள் பலர் கேட்டு மகிழ்ந்தனர்.

### மாயூரம் – வள்ளலார்கோயில்

## துலா மகோற்சவம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்த மான மாயூரம் - வள்ளலார்கோயில் ஸ்ரீ ஞானம்பிகா சமேத ஸ்ரீ வதான்யேசுவரசுவாமி திருக்கோயில் துலா மகோற்சவம் 6—11—66 ஞாயிற்றுக்கிழமை முதல் தொடங்கி 15—11—66 செவ்வாய்க்கிழமை முடிய உள்ள நாட்களில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. 10—11—66 இடபவாகனத்தில் சகோபுர தரிசனக் காட்சியும், 12—11—66 அன்று ஸ்ரீ மேதாதக்ஷிணா மூர்த்தி ஸ்ரீ கங்கையம்மனுடன் அமாவாசை தீர்த்தம் கொடுத் தருளலும், 14—11—66 அன்று திருத்தேர் திருவிழாவும், 15—11—66 அன்று கடைமுக தீர்த்தங் கொடுத்தருளலும் நடைபெற்றன. அன்பர்கள் பலர் தரிசித்து உய்ந்தனர்.

# எதிர்காலம் -திரு. கே. முத்துஜோதிடர்

பராபவஸு மார்கழிமீ 1உ முதல் 29உ முடிய

16—12—66 முதல் 13—1—67 முடிய

## 1. மேஷம் - அசுவதி - பரணி - கார்த்திகை $\frac{1}{4}$

அசுவதி நட்சத்திரம் 4 பாதங்களும் சுபமானபலனைத் தரும். தூரயாத்திரையும், நஷ்டமானபொருள் வரத்தும் உலகப் பிரசித்தியும் உண்டுபண்ணும். மற்ற 5 பாதங்களும் மிஸ்ர பலனைத்தரும். வீண்தொல்லைகளும் காரிய விக்கினமும், மேலோர் பெரியோர்களின் இனவருத்தங்களும் உண்டுபண்ணும். சஸ்ய விருத்தி தான்ய விருத்தி குறைந்துகாட்டும். திங்கள், புதன் சுபமாகும்.

## 2. ரிஷபம் - கார்த்திகை $\frac{3}{4}$, ரோஹிணி - மிருகசீர்ஷம் $\frac{1}{2}$

ரிஷபராசி 9 பாதங்களும் மேலான பலன்களை உண்டு பண்ணும். உத்தியோகத்தில் உயர்வையும், வித்தியாவிருத்தியை யும், மேலோர், பெரியோர்களின் அன்பையும், தன தான்ய பெருக்கையும், தெய்வீகதன்மையையும். எங்கும் பிரசித்தியையும் உண்டுபண்ணும். நஷ்டமான பொருட்கள் தானுக வந்துசேரும். செவ்வாய் புதன் சுபமாகும்.

## 3. மிதுனம் - மிருகசீர்ஷம் $\frac{1}{2}$, திருவாதிரை - புனர்பூசம் $\frac{3}{4}$

மிதுன ராசி 9 பாதங்களும் பூர்ணமான சுபபலனையே தரும், ஆரோக்கியம் உண்டுபண்ணும். குடும்பசுகம் மேன்மேலும் விருத்தி ஆகும். சஸ்யவிருத்தி தான்யவிருத்திகள் ஏற்படும். வெகு தூரத்திலிருந்து வரவேற்புப் பத்திரம் கிடைக்கும். அசாத்யமெல்லாம் சுலபசாத்தியம் ஆகும். திங்கள், புதன் சுபமாகும்.

## 4. கடகம் - புனர்பூசம் $\frac{1}{4}$, பூசம் - ஆயில்யம்

புனர்பூசம் 4ம் பாதமும் பூசம் 2பாதங்களும் சுப பலனைத் தரும், வித்தியாவிருத்தி ஆகும். கீர்த்தி பத்திரம் கிடைக்கும்.

தெய்விகத்தன்மை ஓங்கும். பூசம் 3, 4 பாதங்களும் ஆயில்யம் 4 பாதங்களும் எவராலும் சாதிக்கமுடியாத காரியங்கள் எல்லாம் சுலபசாத்தியமாகும். தீராதவியவகாரம் தீரும். ஸ்தாவரஜங்கம சொத்துக்கள் சேரும். தன, தான்யவிருத்தி ஆகும். சதா தெய்வ சிந்தனையாகவே இருக்கும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

## 5. சிம்மம் - மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

மகம் 4 பாதங்களும் இடம் மாறுதலோடு நல்வாழ்வு உண்டு பண்ணும். உலகில் அவமதிப்பையும், பந்துமித்திராளுடைய சேர்க்கையையும் தரும். நல்லோர் பெரியோர்களின் அன்பினால் தொழில்விருத்தி ஆகும். பூரம் 4 பாதங்களும், உத்திரம் முதல் பாதமும் விசேஷ சௌக்கியத்தைத் தரும். வியாபாரம் ஓங்கும். பயிர் பச்சை விருத்தி ஆகும். தான்ய விருத்தி ஏற்படும். தெய்வ பலம் பிரகாசிக்கும். நூதன பிரபுதரிசனத்தால் எவராலும் செய்யமுடியாத காரியசாதனம் ஏற்படும். சனி ஞாயிறு சுபமாகும்.

## 6. கன்னி - உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம், சித்திரை $\frac{1}{2}$

உத்திரம் 2, 3, 4 பாதங்களும் ஹஸ்தம் 4 பாதங்களும் விசேஷமான ராஜ போகத்தைத்தரும். உத்தியோக உயர்வும், ஆரோக்யமும் குடும்ப சுகமும் விவசாயப்பெருக்கமும் தான்ய விருத்தியும், ராஜாங்க மதிப்பும், கீர்த்தி பத்திரமும் கிடைக்கும். தெய்வீகத்தன்மையாகவே இருக்கும். ஆரோக்கியம் உண்டாகும். சித்திரை 1; 2 பாதங்கள் சுகக்குறைவைத் தரும் எதிலும் நஷ்டகரமாகவே இருக்கும். எந்தக் காரியமும் காலத்தில் நடத்த முடியாது. திங்கள். வியாழன் சுபமாகும்.

## 7. துலாம் - சித்திரை $\frac{1}{2}$, சுவாதி - விசாகம் $\frac{3}{4}$

சித்திரை பின்னரை 3. 4 பாதங்கள் சுபம் இராது. வீண் அலைச்சலும், தொழில் நஷ்டமும், சதா துக்கசமாசார கேள்வியும் தரும். சுவாதி 4 பாதங்களும், விசாகம் 1, 2, 3 பாதங்களும் சுபமாகும். ராஜசபா பிரவேசத்தையும், உலகப் பிரசித்தியையும். தெய்வீகத் தோற்றங்களையுல், ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் தானாக வந்து சேருதலையும், எல்லோராலும் கொண்டாடும் தன்மையையும் உண்டுபண்ணும் சனி, ஞாயிறு சுபமாகும்.

## 8. விருச்சிகம் - விசாகம் - $\frac{1}{4}$, அனுஷம் - கேட்டை

விருச்சிகராசி 9 பாதங்களும் சுபத்தைத்தரும். தொழில் ஓங்கும். ஆரோக்கியம் உண்டாகும். அடிக்கடி சஞ்சார பலன்

ஏற்படும். மேலோர், பெரியோர்களின் வரத்தும், உலக மதிப்பும் ஏற்படச்செய்யும். ராஜாங்கத்தால் விசேஷநன்மை உண்டாகும். திங்கள், வியாழன் சுபமாகும்.

### 9. தனுசு - மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

தனுர்ராசி 9 பாதங்களும் மிஸ்ரமான பலனையே தரும். சதா குடும்பத்தொல்லைகளும், விவசாயக்குறைவும், வீண் நஷ்டங்களும் மேலோர், பெரியோர்களின் இன வருத்தங்களும் உண்டுபண்ணும். ஆனாலும் மாதக் கடைசி 10 தினங்களில் எல்லாம் நன்மையாகவே முடியும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

### 10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$ - திருவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$

மகரராசி 9 பாதங்களும் உயர்பதவியைத்தரும். இல்லற சுகம் ஓங்கும். பந்துமித்ராளுடைய சேர்க்கையையும், தான்ய விருத்தியையும் உண்டுபண்ணும். மேலோர், பெரியோர்களின் அன்பால் அசாத்தியமெல்லாம் சுலபசாத்தியமாகும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

### 11. கும்பம் - அவிட்டம் $\frac{1}{2}$, சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$.

கும்பராசி பூராவும் ராஜயோக வைபவத்தைத்தரும். கிரகத்தில் சதா தெய்விகமான காரியங்களையும், பரோபகாரத்தையும் தந்து உலகப் பிரசித்தியைத் தரும். தெய்வபலம் காக்கும். கட்டிட வேலைகளும், கிரஹ சுகவாசங்களையும் தரும். தூரத்திலிருந்து அழைப்புப் பத்திரம் கிடைக்கும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

### 12. மீனம். பூரட்டாதி $\frac{1}{2}$ உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் ராஜயோகப் பலனைத்தரும். சதா அலைச்சல் ஜாஸ்தி ஆகும். பெரியோர்களின் அன்பினால் எல்லாம் சுலபசாத்தியமாகும். நூதன தொழில் முறையால் ஏற்றமும், அனேகர்களுக்கு உபகரிக்கும் தன்மையும், கீர்த்தி பத்திரங்களும் கிடைக்கும். தெய்விகத்தன்மையால் எல்லாம் ஓங்கும். ஆரோக்கியம் உண்டாகும். தீராத கவலைகள் தீரும். நல்வாழ்வு ஏற்படச்செய்யும். புதன், வியாழன் சுபமாகும்.

### முக்கிய அறிவிப்பு.

ஸ்ரீமான்கள், கனதனவான்கள்; மேலோர்கள், பெரியோர்கள், மாணவர்கள் முதலான எல்லோருக்கும் மிகுந்த வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்வதாவது :-

தற்காலம் உலகில் ஏற்பட்டு இருக்கும் நிலைமையானது மாறி சுபிட்சம் அடைந்து எங்கும், தன தான்யவிருத்தி ஏற்பட்டு, உலகமக்கள், அமைதியுடனும், சந்தோஷத்துடனும் ஒவ்வொருவரும் ஜீவன சுகத்துடன் இருந்துகொண்டு காலம்கழித்துவர மகாஜனங்களின் ஒத்துழைப்புத்தான் அவசியம் தேவை சென்ற சுபகிருது வருஷம் தை மாதத்தில் ஏற்பட்ட அஷ்டகிரகக் கூட்டம் ஆரம்பித்தது முதல் உலகத்தில் பலவிதமான சிரமங்களை அனுபவித்துவருகிறோம். அந்தக் கூட்ட கிரகங்களின் பலன் ஆரம்பித்தது முதல் 12 வருடங்கள் தன் பவரை செலுத்தும். அதற்குப் பெயர்தான் (துவாதச வருஷாமம்) என்று பெயர். ஆதலால் மகாஜனங்கள் பிராசீன தர்மத்தைக் கைவிடாமலும், தர்மபுத்தியோடும், பரோபகர சிந்தையோடும், இருந்துகொண்டு தன் ஆத்மார்த்தம்போலவே உலக க்ஷேமத்தின் பொருட்டு ஆங்காங்கு கோயில்கொண்டு எழுந்தருளி இருக்கும் சிவ, கேசவ, சக்தி ஆலயங்களிலும், நவக்கிரகக்ஷேத்திரங்களிலும், தேவ, கோபம் தணிந்து உலகம் சௌக்கியம் அடைய வேதாகம' ஜோதிட, தர்ம சாஸ்திர, மந்திர சாஸ்திரங்களைப் பூர்ண நம்பிக்கையை வைத்துக்கொண்டு ஏராளமாகத் தனம் வசூல் செய்து லக்ஷகோடி ஹோமங்களும், அர்ச்சனைகளும், எதேஷ்டமான அன்னதானங்களும் செய்துகொண்டுவர எதிர்காலம் கடவுள் கிருபையால் சுபிட்சமாகவும், மங்களகரமாகவும் ஓங்கும். ராஜாங்கம் செழிக்கும்.

## விசேஷ நாட்கள்

—12— [illegible] —1 —'67 முடிய

13—12—66 மூர்க்கநாயனர் திருநக்ஷத்திரம்
14—12—66 சிறப்புலிநாயனர் திருநக்ஷத்திரம்
19—12—66 திருவெம்பாவை உற்சவ ஆரம்பம்
21—12—66 வாயிலார் நாயனர் திருநக்ஷத்திரம்
23—12—66 வைகுண்ட ஏகாதசி
25—12—66 பிரதோஷம், கிருத்திகை
27—12—66 சடைய நாயனர் திருநக்ஷத்திரம், நடேசர் அபிஷேகம்
28—12—66 ஆருத்ரா தரிசனம்
30—12—66 ஆனந்தபரவசர் குருபூசை
2— 1—67 இயற்பகை நாயனர் திருநக்ஷத்திரம்
5— 1—67 மானக்கஞ்சாற நாயனர் திருநக்ஷத்திரம்
8— 1—67 பிரதோஷம்
10— 1—67 சாக்கிய நாயனர் திருநக்ஷத்திரம்.